## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


01.04.2018 பாஸ்கா காலம் முதல் ஞாயிறு - திருப்பலி 02

08.04.2018 பாஸ்கா காலம் 2ஆம் ஞாயிறு - திருப்பலி 03

08.04.2018 இறை இரக்க ஆண்டவரின் திருவிழா - திருப்பலி 04

இறை இரக்கத்தின் பக்தி - செபவழிபாடு 05

09.04.2018 கிறிஸ்து பிறப்பு முன்னறிவிப்புப் பெருவிழா - திருப்பலி 07

11.04.2018 தூய ஸ்தனிஸ்லாஸ் - திருப்பலி 09

15.04.2018 பாஸ்கா காலம் 3ஆம் ஞாயிறு - திருப்பலி 10

21.04.2018 கான்டர்பரி தூய ஆன்சல்ம் - திருப்பலி 12

22.04.2018 பாஸ்கா காலம் 4ஆம் ஞாயிறு - திருப்பலி 13

23.04.2018 தூய ஜார்ஜ் மறைசாட்சி - திருப்பலி 14

25.04.2018 தூய மாற்கு நற்செய்தியாளர் விழா- திருப்பலி 15

28.04.2018 தூய லூயி தே மோன்ஃபோர்ட் - திருப்பலி 17

29.04.2018 பாஸ்கா காலம் 5ஆம் ஞாயிறு - திருப்பலி 18


## பகுதி 2: விசுவாசத்தில் வளர...


உயிர்ப்பும் நம் வாழ்வும் 19

தூய மாற்கு நற்செய்தி நமக்கு தரும் பாடம் 21

தூய லூயி தே மோன்ஃபோர்ட் 25

திருச்சபை செய்திகள் 26

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

### 01.04.2018 பாஸ்கா காலம் முதல் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

I. தி.ப. 10:34அ,37-43 II. கொலோ.3:1-4 யோவான் 20: 1-9

பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு இவை மூன்றும் சேர்ந்து வரலாறானது, இறை இயேசு ஒருவருக்கு மட்டும்தான். உலகில் தோன்றிய மனிதர்களில் இறை இயேசு ஒருவர்தான் தனது பாடுகள், மரணம், உயிர்ப்புப்பற்றிக் கூறியவர். உண்மையாகவே சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். இந்த உண்மையை வியந்து போற்றி உலகமே கொண்டாடி வருகிறது. ஆனால் நாம் அன்று போலவே இன்றும் மறைநூல் வாக்கைப் புரிந்துகொள்ளாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். திருத்தூதர்கள், மகதலா மரியாவின் சான்றைக் கேட்டு நம்பினர். இறை இயேசுவின் உயிர்ப்பு மேற்கூறியவர்களுக்குப் புதிய பார்வையையும், புதிய நம்பிக்கையையும், வல்லமையையும் கொடுத்து இயங்க வைத்தது. நாமும் இப்படி இயங்க வேண்டும், இயங்குவதற்கு நமது வாழ்வில் இறை இயேசுவின் உயிர்ப்புக் கொண்டாட்டம், வழியும் ஒளியுமாக அமைய வேண்டும்.

உயிர்ப்பு விழா நம்மைத் தன்னலத்திலிருந்தும் தற்பெருமையிலிருந்தும் விடுவிக்க வேண்டும். தாம் சொன்னபடியே இயேசு உயிர்த்தெழுந்தார். நாமும் சொன்னபடி வாழவேண்டும், உயிர்த்த கிறிஸ்துவை அறிவிக்க வேண்டும். நம் உள்ளங்களில் அடைப்பட்டிருக்கும் அநேக கற்கள் அகற்றப்பட வேண்டும். உயிர்த்து வாழும் கிறிஸ்துவில் திருமுழுக்குப் பெற்றுள்ள நாம் முழுமையான நிறைவான மாற்றம் பெற வேண்டும். மாற்றம் பெற்று புதுவாழ்வு கொண்டவர்களாக நமது பங்கு, மறைவட்டம், மறைமாவட்டம், தமிழகம், உலகு எங்கும் வலம் வருவோம். உயிர்ப்பு விழாவை இணைந்து கொண்டாடி மகிழ்வோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பு இறைவா, உண்மைக்குச் சான்று பகர இறை இயேசுவின் பணியை சிரமேற்கொண்டிருக்கும் எங்கள் திருத்தந்தை, கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவிகள் அனைவரும் தம் பணியில் சிறிதும் நழுவாமல் வாழ்ந்து நம்பிக்கையின் உண்மையை அறிவிப்பவர்களாகத் திகழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. ஆற்றலே உருவான எம் இறைவா, அன்று உம் திருமகனின் உயிர்ப்பைக் கண்டு, நம்பி செயலாற்றியவர்கள் போல நாங்களும் எங்கள் குடும்பங்களும் உமது உயிர்ப்பின் மகத்துவத்தை உணர்ந்து, அதே நெறியில் தவறாது வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கமே உருவான இறைவா, உயிர்ப்பு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் அனைத்து மக்களுக்கும் நாங்கள் அனைவரும்





ஒளியாக, வழியாக, தன்னம்பிக்கை அளிப்பவர்களாக, சான்று பகர்பவர்களாக வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. ஈகை வள்ளலே இறைவா, புதுவாழ்வுடன் நாங்கள் வாழ நீர் அனைத்தையும் வழங்கி எங்களை விடுதலையாக்கியதுபோல, நாங்களும் எங்களிடம் உள்ளவற்றை இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

### 08.04.2018 பாஸ்கா காலம் 2ஆம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. தி.ப. 4:32-25 II. 1யோவா.5: 1-6 யோவா. 20:19-31

இயேசு கிறிஸ்துவில் மிகவும் அன்பிற்குரிய சகோதரி, சகோதரர்களே, இன்று திருஅவையானது பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு நம்மை அழைத்திருக்கிறது. இன்றைய முதல் வாசகத்தில், தொடக்கக் காலத் திருச்சபையானது தூய ஆவியின் செயல்பாட்டோடு செயல்பட்டு ஒற்றுமையின் சின்னமாக விளங்கியது. அன்று ஏற்பட்ட ஒற்றுமை, நம்பிக்கை இன்றும் நம்மிடையே நிலவ திருஅவை அழைக்கிறது. பகிர்வு அன்று இருந்தது. இன்று பகிர்வு குறைந்துகொண்டே போகிறது. தனக்கே எல்லாம் தனக்கே, இன்னும் பல வீடுகள் என்று தெருத் தெருவாக ஊர், ஊராக சொத்துகளை வாங்கிக்குவிக்கும் மனப்பான்மை மாறவேண்டும். இரண்டாவது வாசகத்தில், கடவுள் தரும் சட்டங்கள் என்றுமே வாழ்வு தருபவை. இயேசு கூறுவதுபோல "என் நுகம் அழுத்தாது, என் சுமை எளிதாயுள்ளது" (மத். 11:30) என்கிறார்.

இன்றைய நற்செய்தியில் தூய தோமா "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்" என நம்பிக்கை முழக்கமிடுகிறார். தூய தோமா ஒருவர்தான் "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்" என இயேசுவை ஆண்டவர் என்று தைரியமாக ஏற்று அறிக்கையிடுகிறார். அன்றைய நாட்களில் யூதர்கள் இயேசு மனிதராகப் பிறந்ததுபோல் மனிதராகவே இறந்தார் என நினைத்துக்கொண்டிருந்தார்கள் ஏன் சீடர்களும் இனிமேல் இயேசுவினால் நமது வாழ்வில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படப்போவதில்லையென்று ஓடி ஒளிந்திருந்த நேரத்திலும் தூய தோமா உறுதியிட்டு நம்பிக்கையோடு கூறுகிறார். "கண்டு நம்புவதை விட காணாமல் நம்புவதே பேறுடைமை" என நற்செய்தியாளர் யோவானும் இந்த நிகழ்வை நமக்கு எடுத்துக்காட்டுகிறார். நமது நம்பிக்கையைப் பலப்படுத்த இறையேசுவிடம் இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. சாவை வென்று உயிர்த்த மாட்சிமிகு இயேசுவே, தொடக்கக் காலத் திருச்சபையில் இருந்த அதே இறை நம்பிக்கையை எங்களுடைய திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரும்

பொதுநிலையினரான எங்களுக்குத் தந்து, பகிர்ந்து வாழும் தாராள உள்ளத்தை எங்களில் மலரச் செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அக்கறையுடன் வழிநடத்தும் உயிர்த்த ஆண்டவரே, எங்கள் நாட்டையாளும் தலைவர்களையும் அவர்களின்கீழ் பணிபுரியும் அதிகாரிகளையும் உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். அவர்கள் உம் சார்பாக இந்த பணிகளை எங்களுக்குச் செய்கிறார்கள் என்பதை நாங்கள் உணரவும், அவர்களும் நீர் ஏற்படுத்திய பிரதிநிதிகள் என்பதை உணர்ந்து ஆளுகைச் செய்திடவும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. அறிவூட்டுகின்ற ஆண்டவரே, அரசுத் தேர்வு எழுதும் எம் பிள்ளைகளை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். அறிவாற்றலையும், நுண்ணறிவையும் மனிதருக்கு மழையெனப்பொழியும் ஆண்டவரே, இந்த தேர்வுக் காலங்களில் உம் அன்புப் பிள்ளைகளை நீர் ஆசிர்வதித்து, நல்ல உடல்நலம் கொடுத்து தேர்வினை எதிர்கொள்ளக்கூடிய ஆற்றலையும், தைரியத்தையும் அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

4. குணமளிக்கும் இறைவா, உம் திருமகன் நோயாளர்களைத் தேடிச்சென்று அவர்களைக் குணப்படுத்தினார். தங்கள் உடல், உள்ள நோய்களிலிருந்து அவர்கள் முற்றிலும் விடுபட பெரிதும் உழைத்தார். அந்த அன்பு ஆண்டவர் இயேசுவையே நாங்கள் தலைசிறந்த முன்மாதிரியாகக் கொண்டு, மற்றவர்களது சுமைகளைத் தாங்கிக்கொண்டு, அவர்களது உடல் நலத்திற்காகப் பெரிதும் உழைத்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 08.04.2018 பாஸ்கா காலம் 2ஆம் ஞாயிறு இறை இரக்க ஆண்டவரின் திருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

அன்புக்குரியவர்களே, இன்று பாஸ்கா காலத்தின் உயிர்ப்பின் இரண்டாம் ஞாயிறோடு இறை இரக்க ஆண்டவரின் திருவிழாவையும் நினைவு கூறுகின்றோம். நீங்கள் நம்புவதற்காகவும் நம்பி வாழ்வு பெறுவதற்காகவுமே இந்நூலில் உள்ளவை எழுதப்பட்டன என்று முடிகிறது இன்றைய நற்செய்தி வாசகம். இயேசு தோமாவின் நம்பிக்கையின்மையை கடிந்துகொண்டார். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர் என்று மொழிந்தார். இயேசு சாவையும் இருளின் ஆற்றல்களையும் வென்று உயிர்த்துவிட்டார் என்பதை நம்புவதற்கு அவரது சீடர்களே பெரிதும் தயங்கினர் என்பதை கண்டு நாம் வியப்படையலாம். ஆனால் நாமும் அப்படித்தானே. நம் வாழ்வில் நோய்கள், துன்பங்கள், ஏமாற்றங்கள் வரும்போது நாம் நம்பிக்கை இழக்கின்றோமே? இவை நாமும் உயிர்ப்பை நம்பவில்லை என்பதன் அடையாளங்களே. நாம் உயிர்ப்பின் சீடர்கள் என்றால் அனைத்தும் இறைவனில் நிறைவேறும் என்ற நம்பிக்கையில்





வலிமை அடைய வேண்டும். அவ்வாறு நாம் நம்பவும் நம்பி வாழ்வு பெறவும் இன்றைய திருவழிபாடு நம்மை அழைக்கின்றது. அந்த அழைப்பை ஏற்போம். தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. நம்பிக்கையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகள் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும் சோர்வுற்றோருக்கு பலமாகவும், வழிதவறியோருக்கு நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்து உமக்காக வாழும் வரத்தை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. உயிர்ப்பின் நாயகனே இயேசுவே, உமது வார்த்தையை உலகுக்கு எடுத்துரைக்க இறைவாக்கினரை ஏற்படுத்துகின்ற இறைவா, உம் வாக்கை அன்புடனும் தாழ்ச்சியுடனும் கேட்டுக் கீழ்படியும் மக்களாக நாங்கள் வாழ இறைவா உம்மை மன்றாடுகிறோம்

3. சாவை வென்று உயிர்த்த மாட்சிமிகு இயேசுவே, தொடக்க காலத் திருச்சபையில் இருந்த அதே நம்பிக்கையை எங்களில் உருவாக்கும். பகிர்ந்து வாழும் தாராள உள்ளத்தை எங்களுக்கு தந்து உமது தூய ஆவியினால் எங்களை நிரப்பியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

4. அனைத்திலும் சிறந்தது அன்பே என்பதை அறியும் நாங்கள் உண்மையான அன்பின் மக்களாக வாழ வேண்டுமென்றும் ஏழை, எளிய, ஆதரவற்ற, கைவிடப்பட்டோர், இன்னலுறுவோருக்கு உமது அன்பை அளிக்கும் தாராள மனதை எங்களுக்கு தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## இறை இரக்கத்தின் பக்தி செபவழிபாடு

**முன்னுரை** சகோ. பிபின்

தாய் தன் பிள்ளையைப் பாதுகாப்பதுபோல் இந்த இரக்கத்தின் பக்தியைப் பரப்புவோர்களைப் பாதுகாப்பேன், அவர்களுடைய மரண வேளையில் அவர்களுக்கு நீதிபதியாக இல்லாமல் இரட்சகராக இருப்பேன். உலக ஆரம்பத்திலிருந்தே இறைவன் மக்கள்மீது தாம் கொண்டுள்ள இரக்கத்தை வெளிப்படுத்தி வந்துள்ளார். பழைய ஏற்பாட்டு வரலாற்று நிகழ்ச்சிகள் வழியாகவும், புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவின் வழியாகவும், இறைவனின் இரக்கம் நமக்கு வெளிப்படுத்துகின்றது. ஆண்டவரை அன்பு செய்கிறவர்களுக்கு அவரது இரக்கம் தலைமுறை தலை முறையாய் உள்ளதென்று அன்னை மரியாள் தனது மகிழ்ச்சிப் பாடல் மூலமாக கூறுகின்றார்.

அன்பு அனைவருக்கும் பொதுவான ஒன்று, இரக்கம் அதில் கிடைக்கும் அழகான பண்பு. இறை இரக்கம் அனைவருக்கும் சமமான அன்பு. ஆகவே இந்த இறை இரக்க வழிபாட்டில் நமக்காகவும், மனுக்குலம்

முழுவதும் சிறப்பாக பாவிகள் இறைவனின் இரக்கத்தையும், அன்பையும் பெற்று, இறையனுபவம் பெற இத்திருவழிபாட்டிலே சிறப்பாக செபிப்போம். இயேசுவின் அன்பை அனைவரோடும் பகிர்வோம்.

**மன்னிப்பு வழிபாடு**

ஓ, வாழ்வின் சுவையே, இரக்கத்தின் ஊற்றே, நீர் அகில உலகையும் அரவணைத்து உமது இரக்கம் முழுவதையும் எம்மீது பொழிந்துள்ளீர். ஆனால், நாங்கள் அந்த இரக்கத்தை ஏற்றுக்கொள்ளாமல், பிறருக்கு இரக்கம் காட்டாமல் உமக்கு எதிராக செய்த பாவங்களுக்காகவும் செய்ய தவறிய நன்மைகளுக்காகவும் மன்னிப்பு கேட்கிறோம். உமது இரக்கத்தால் எம்மை கழுவும் தெய்வமே.

**பதில்:** மனம் வருந்தி மனம் திருந்தி உம்மை சரணடைந்தேன் என்னை ஏற்று மன்னித்தருள உம்மை வேண்டுகிறேன்

1. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, நீர் ஏற்படுத்திய திருச்சபையின் சட்ட திட்டங்களை மதியாமலும், திருச்சபையின் தலைவர்களை மதியாமலும் பாவ வாழ்க்கையை வாழ்ந்ததற்காகவும் எங்களை மன்னியும்.
2. அருளைப் பொழிபவரே எம் இறைவா, எம் நாட்டையும் எம் நாட்டு மக்களின் வளர்ச்சியையும் கருதாது எப்பொழுதும் என்னைப் பற்றியே நினைத்து தனித்து வாழ்ந்த நேரங்களுக்காக என்னை மன்னியும்.
3. அன்பின் இறைவா, பல்வேறு பிரச்சனைகளிலும், இன்னல்களிலும் தவிக்கும் நண்பர்களுக்கு உதவி செய்ய மறந்த, மறுத்த காரணத்திற்காக என்னை மன்னியும்.
4. அருளின் இறைவா, மற்றவர்களின் பெருமையை வெளியே சொல்லாமல், அதை முடக்கி, எங்களுடைய திறன்களையும், ஆற்றல்களையும் பற்றி பெருமையாக பேசி, தற்பெருமை கொண்டதற்காக என்னை மன்னியும்.
5. இரக்கத்தின் இறைவா, இரக்கம் என்ற நற்குணத்தை மறந்து இரக்கமற்றவராக வாழ்ந்த தருணங்களுக்காக என்னை மன்னியும்.
6. இரக்கத்தின் ஆண்டவரே, எங்கள் பாவ வாழ்க்கையால் நாங்கள் செய்த அனைத்து பாவங்களையும் மன்னித்து உமது இரக்கத்தால் எங்கள் வாழ்க்கையில் ஒளியை ஏற்றிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**அமைதியில் சில நிமிடங்கள்**

அமைதியில் சில நிமிடங்கள் இறையேசுவோடு உறவாடுவோம். ஊதாரித்தனமாக நாம் அலைந்திருந்த போதிலும், திருந்தி, திரும்பிய தருணங்களில் அவர் நம்மை மன்னித்து அரவணைத்தமைக்காக நன்றி கூறுவோம்.





**நன்றி செபம்**

உள்ளத்தின் ஆழத்திலிருந்து அமைதியில் இறையோடு உறவாடிய நாம் தற்போது நம் வாய் திறந்து இறைவனின் மாபெரும் செயல்களுக்காக நன்றி பாடல் பாடுவோம்.

**நன்றி பாடல்:** நன்றியால் துதிப் பாடு. . .

**திருப்பாடல் 123: இரக்கத்திற்காக செபிப்போம்.**

விண்ணுலகில் வீற்றிருப்பவரே, உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன். பணியாளனின் கண்கள் தன் தலைவனின் கைதனை நோக்கியிருப்பதுபோல, பணிப்பெண்ணின் கண்கள் தன் தலைவியின் கைதனை நோக்கியிருப்பதுபோல, என் கடவுளாகிய ஆண்டவரே, நீர் எமக்கு இரங்கும்வரை, எம் கண்கள் உம்மையே நோக்கியிருக்கும். எங்களுக்கு இரங்கும் ஆண்டவரே, எங்களுக்கு இரங்கும், அளவுக்கு மேலேயே நாங்கள் இகழ்ச்சி அடைந்துவிட்டோம். இன்பத்தில் திளைப்போரின் வசைமொழி போதும். இறுமாந்த மனிதரின் பழிச்சொல்லும் போதும்.

**நற்கருணை பாடல்: மாண்புயர் கீதம். . .**

**நற்கருணை செபம்**

தயை நிறைந்த இறைவா, இரக்கத்தின் தந்தையே, ஆறுதலின் தேவனே உம்மில் விசுவாசமும் நம்பிக்கையும் கொண்ட ஆன்மாக்கள்மீது இரக்கம் கொண்டவரே, உமது அளவற்ற இரக்கத்தைக் குறித்து, எங்கள் பேரில் உமது கருணைக் கண்களைத் திருப்பியருளும். இத்துன்ப உலகில் எங்களுக்கு நேரிடும் சோதனைகளிலும் உமக்குப் பிரமாணிக்கமாய் இருக்க உமது இரக்கத்தின் அருள் கொடைகளை எங்கள்மீது நிறைவாய் பொழிந்தருளும். என்றும் வாழ்பவரும் எல்லாம் வல்லவருமாகிய எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும். ஆமென்.

## 09.04.2018 கிறிஸ்து பிறப்பு முன்னறிவிப்புப் பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

I. எசா. 7:10-148:10 II. எபி. 10: 4-10 லூக். 1:26-38

இறையேசுவில் பிரியமானவர்களே, இன்று திருச்சபையானது அதிதூதர் கபிரியேல் கன்னிமரியாளிடம் "கிறிஸ்து, மனித குல மீட்பர், உம் வயிற்றில் தோன்றுவார்" என்ற மாபெரும் மகிழ்ச்சியான செய்தியை அறிவித்த நாளைக் கொண்டாடுகிறது. மேன்மையான நிலையில் படைக்கப்பட்ட முதல்பெற்றோர்கள் தங்களுடைய தவறானச் செயலால் அந்நிலைக்கு அருகதையற்றவர்களாய் ஆகிவிட்டனர். இறைவனுடன் இருந்த நெருக்கமான உறவை இழந்துவிட்டனர். ஆனால் இறைவனோ இரக்கமுடையவராய் முதல் பெற்றோர் இழந்த நிலையை திரும்பவும் அளித்திட திட்டம் வகுத்தார். அதுவே மீட்பின் திட்டம். இத்திட்டத்தைச்

செயலாக்க வாக்குறுதியும் அளித்தார். "உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையை காயப்படுத்தும்" (தொ.நூ.3:15). இது மனித இன மீட்பின் தொடக்கமாகும். இந்நாள் அன்னை மரியாள் விழாவும் ஆகும்.

வானதூதரின் அறிவிப்புதான் ஒரு கன்னியாக இருந்ததால் ஒரு சிக்கலை உண்டாயிருக்க வேண்டும். இருப்பினும் "உமது விருப்பத்தின்படியே ஆகட்டும்" (லூக்.2:38) என்று சொன்னதின் வழியாக, மனித சிந்தனையைத் தூக்கியெறிந்துவிட்டு கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றி, "கடவுளின் வார்த்தையை கேட்டு அதன்படி நடப்பவர்களே என் தாயும் சகோதரரும் ஆவர்" (லூக். 8:21) என்ற இயேசுவின் வார்த்தைகளை முன்பே அறிந்தவளாய் நல்ல பங்கைத் தேர்ந்தெடுக்கும் தகுதியையும் தூய தாமஸ் வில்லனோவா பின்வருமாறு எழுதுகிறார். "மரியாவின் ஆகட்டும்" என்ற சொல், "உண்டாகட்டும்" என்று எல்லாம் வல்லவர் உச்சரித்தபோது விண்ணும் மண்ணும் தோன்றியதுபோல "ஆகட்டும்" என்ற சொன்ன நேரத்தில் அன்னை மரியாளும் இயேசுவைக் கருதரித்தாள்.

இவ்விழாவின் வழியாக முரண்பாடான சூழ்நிலைகளிலும் இறைவனின் திருவுளத்திற்கே கீழ்ப்படிய வேண்டுமென்றும் அன்னை மரியாள் "இதோ உமது அடிமை" என்று தன்னையே தாழ்த்திக் கொண்டதைப் போல நாமும் இறைவனின் திட்டத்தோடு இணைந்து செயல்பட நம்மையே தாழ்மையாக்கிக் கொள்ள வேண்டுமென்ற படிப்பினையை அறிந்து பின்பற்றுவோம். இம்மாபெரும் விழாவினை நினைவு கூறும் இந்நாளில் ஆண்டாண்டு காலமாக சொல்லிவந்த பக்தி முயற்சியான மூவேளைச் செப பக்தி குறைந்துவிட்டதை உணர்ந்து இனி இந்த செபத்தை ஆழ்ந்த விசுவாசத்தோடு சொல்ல முயற்சிப்போம், அன்னை மரியாளைப் போல நாமும் எப்பொழுதும் இறைவனுக்காகவும், பிறருக்காகவும் நம்மையே வெறுமையாக்கி பிறரின் நல்வாழ்விலும் முன்னேற்றத்திலும் உதவும் மனநிலையைப் பெற்றிட இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. சர்வ வல்லமையுள்ளவரே, உமது மீட்பின் பணியைத் தொடர்ந்து நடத்திட உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரும் உமது மீட்பின் திட்டத்தைத் தூய ஆவியின் துணையோடு தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட இறைச் சமூகத்தை வழிநடத்திடும் வல்லமையையும், ஆற்றலையும் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கத்தின் ஊற்றே இறைவா, அன்னை மரியாவின் விழாவைக் கொண்டாடும் இந்நாளில் அன்னை மரியாளைப்போல நாங்கள் தாழ்ச்சியும், கீழ்ப்படிதலும், தியாகமும் உள்ளவர்களாய் வாழ்ந்திடும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.





3. அன்பே உருவான இறைவா, உமது திட்டத்தைச் செயலாக்க அன்னை மரியாள் "இதோ உமது அடிமை, உம் வார்த்தையின்படியே ஆகட்டும்" என்று தன்னையே அர்ப்பணித்ததுபோல நாங்களும் பிறரின் துன்ப நேரங்களில் அவர்களுக்கு ஆறுதலாகவும், தேறுதலாகவும் இருக்க வேண்டிய நல்ல தாராள மனதைத் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. தூய்மையின் இருப்பிடமே இறைவா, அன்னை மரியாவை எங்களின் தாயாகப் பெற்றுக்கொண்ட நாங்கள் அன்னை மரியாளின் பக்தி முயற்சியான செபமாலை செபித்தல், அன்னையின் நவநாள், பக்திமாலை, திரிகாலசெபம் போன்றவைகளை எங்களுடைய வாழ்வில் கடைப்பிடித்து, அன்னையின் பரிந்துரையால் இறைவனின் இரக்கத்தையும், அருள் ஆசீரையும் பெற வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 11.04.2018 தூய ஸ்தனிஸ்லாஸ் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்றைய தினம் தூய ஸ்தனிஸ்லாஸ் என்னும் புனிதரைச் சிறப்பிக்க அழைக்கின்றது நம் திருஅவை. தூய ஸ்தனிஸ்லாஸ் கி.பி. 1030ஆம் ஆண்டு ஜூலை 26ஆம் நாள் போலந்து நாட்டிலுள்ள (கிராக்கோ நகரில்) செப்பனோவ் என்னும் இடத்தில் ஞானம் நிறைந்த தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். சிறுவயது முதலே நல்ல கல்வி பயின்று 7 ஆண்டுகள் பாரிஸில் கல்வி கற்று குருவாகி சேவைசெய்து வந்தார். அவரது போதிக்கும் திறமையைக் கண்ட "கிராக்கோ" நகரின் ஆயர் அவரை ஆன்மீக ஆலோசகராக நியமனம் செய்தார். பின் கி.பி. 1072ல் தூய ஸ்தனிஸ்லாஸ் "கிராக்கோ"வின் ஆயராக பதவி ஏற்றார்.

அக்காலகட்டத்தில் பாவச்செயல்கள் பலபுரிந்த அந்நாட்டு மன்னனைத் தனியாகச் சந்தித்து அவரின் பாவச் செயல்களை வன்மையாகக் கண்டித்தார். அதன் பயனாக சிறிது காலம் மனம்மாறி பின் திரும்பவும், அந்நாட்டின் நல்ல மனிதரான ஒருவரின் பேரழகியான மனைவியைக் கவர்ந்ததால் தூய ஸ்தனிஸ்லாஸ் அம்மன்னனை திருச்சபையை விட்டு விலக்கினார். இதனால் சினங்கொண்ட அம்மன்னன் நமது புனிதர் போதிக்கும் வேளையில் ஆலயத்தில் நுழைந்து கொன்றான். கடவுளின் வார்த்தைகளைக் கூறிக் கொண்டே இரத்த சாட்சியாக இறந்த புனித ஸ்தனிஸ்லாஸ் இறந்து கி.பி. 1079, ஏப்ரல் 11ம் நாள். அரசனானாலும் தவற்றைச் சுட்டிக்காட்டித் திருத்தும் நம் புனிதரைப் போன்று நாமும் உறுதியுடன் செயல்பட இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல இறைவா, திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் ஆகிய நாங்கள் அனைவரும் கண்ணுக்கெதிராக பாவம் செய்யும் மனிதர்களைத்

தட்டிக் கேட்கவும், அவர்களை நல்வழிப்படுத்த வேண்டிய கடமை எங்களுக்கிருப்பதை உணர்ந்து தியாக உணர்வுடன் தூய ஸ்தனிஸ்லாஸ் போன்று செயல்படவும் வேண்டிய மன உறுதியை எமக்கு அருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. தயை மிகுந்த இறைவா, அழிவின் பாதையில் சென்றுக்கொண்டிருக்கும் இவ்வுலகை அழிவிலிருந்து மீட்கவும், மக்கள் அமைதியுடன் வாழவும் உம்மீது நம்பிக்கை வைத்து போதித்து தியாக பலியான தூய ஸ்தனிஸ்லாஸ் போன்று நாங்களும் தியாக வாழ்வு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பின் இறைவா, உமது அன்பால் நனைந்து கனிந்து தன்னையே அளித்து இன்று தூய நிலைக்கு உயர்ந்திருக்கும் தூய ஸ்தனிஸ்லாஸ் போன்று இறைமக்களும் உமது அன்பை சுவைத்து மனம்மாறி தூய வாழ்வு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பின் இறைவா, எம் இளைஞர் இளம் பெண்களுக்காக மன்றாடுகிறோம். இவர்கள் தங்கள் வாழ்வில் ஏற்படும் தடைகளைத் தகர்த்தெறிந்து நேரிய வழியில் தங்களின் வாழ்க்கைப் பயணத்தைத் தொட இவர்களுக்குப் போதுமான ஞானத்தையும், தெளிந்த சிந்தனையையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 15.04.2018 பாஸ்கா காலம் 3ஆம் ஞாயிறு திருப்பலி

முன்னுரை திருமதி. பத்மாவதி

I. தி.ப. 3: 13-15,17-19 II.1யோவா. 2: 1-5 லூக். 24: 35-48

இனி நான் மன அமைதியுடன் படுத்துறங்குவேன், ஏனெனில் ஆண்டவரே, நான் தனிமையிலிருந்தாலும் நீரே என்னைப் பாதுகாப்புடன் வாழச் செய்கின்றீர் (தி.ப. 4: 8). பேதுரு மக்களை நோக்கி, "நம் மூதாதையரின் கடவுள் தன் ஒரே மகனைப் பெருமைப்படுத்தினார். ஆனால் நீங்களோ கொலையாளியான பரபாவை விடுதலைச் செய்ய வேண்டினீர்கள். குற்றமற்ற இயேசுவை மரணதண்டனைக்குத் தீர்ப்பிட்டீர்கள். ஆனால் இறந்தவரை கடவுள் உயிருடன் எழுப்பினார். அதற்கு நாங்களே சாட்சிகள். எனவே உங்களுக்காக தன்னுயிர் ஈந்து உங்களை பாவத்திலிருந்து மீட்ட அவர்மீது நம்பிக்கை வையுங்கள் மீட்பு பெறுவீர்கள்". சீடர்கள் தங்கள் நடுவில் நின்ற இயேசுவைக் கண்டு ஆவியென பயந்தனர்.

இயேசு அவர்களிடம் தனது ஆணிகளால் துளைக்கப்பட்ட தனது காயங்களைக் காட்டி பயத்தைப் போக்கினார். 3 வருடங்களாக அவரோடு உண்டு ஊர் ஊராகச் சுற்றியவர்கள் நம்பவில்லை. அவரைக் காணாத நாமோ நம்புகிறோம். நம்பினால் மட்டும் போதுமா? உண்மையான உள்ளத்துடன் அவரின் வார்த்தைகளைக் கடைப்பிடித்து அதன்படி வாழவேண்டாமா? இயேசுவின் வார்த்தையைக் கடைப்பிடிப்போரிடம் கடவுளின் அன்பு உண்மையாகவே நிறைந்துள்ளது. நாமும் அவரோடு இணைந்திருப்போம்.





இயேசுவின் இறப்பும் உயிர்ப்பும் ஒரு கட்டுக்கதையன்று, அவருடன் வாழ்ந்த சீடர்களின் சாட்சியங்கள். நேரடியாக அவரது துன்ப மரணத்தைக் கண்டவர்கள் என்பதால் இயேசுவின் உயிர்ப்பு அவர்களுக்கு மனமாற்றத்தையும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுத்து, நற்செய்திப் பணியைத் தீவிரமாக செயலாற்ற வல்லமையைக் கொடுத்து இயேசுவின் சீடர்கள்-மறைசாட்சிகள் என்ற புனிதத்தையும் கொடுத்தது. இயேசுவே, இத்திருப்பலியில் கலந்துகொள்ளும் நாங்கள் உம்மை உணர்ந்துக்கொள்ளவும், உமது நற்செய்திக்காக செயலாற்றவும் எங்கள் மனக்கண்களைத் திறந்தருளும்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. அன்புத் தந்தையே இறைவா, உமது திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரும் அன்பிலும், அமைதியிலும் தங்களின் அழைத்தலின் மேன்மையை உணர்ந்து, மனமகிழ்வுடனும் ஆர்வத்துடனும் தியாக உள்ளத்துடனும் செயல்பட அருள்புரிய உம்மை மன்றாடுகிறோம்.

2. நீதியின் இறைவா, நாட்டுத் தலைவர்கள் தங்கள் மக்களின் நலனில் அக்கறைக்கொண்டு, அறநெறியில் நடந்து நீதியையும் அமைதியையும் வளமான வாழ்வையும் மக்களுக்கு அளித்து நல்லாட்சி செய்ய அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. குணமளிக்கும் இறைவா, தீராது நோயுற்றோர், அமைதியற்றோர், வறுமையில் வாடுவோர் அனைவரும் உம்மீது ஆழ்ந்த விசுவாசமும் நம்பிக்கையும் கொண்டு அவர்கள் தங்களின் வாழ்வில் மனதிடத்தோடு வாழ அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

4. இரக்கம் காட்டுங்கள், கடவுளின் இரக்கத்தை பெறுவீர்கள் என்று கூறிய இயேசுவே, மருத்துவமனை, முதியோர் இல்லம், சிறைச்சாலை, குழந்தைகள் காப்பகம், மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் தங்களுடைய பணியில் ஏற்படும் சோர்வு, கோபம், வெறுமை இவைகளை இறைவனின் வல்லமையால் மாற்றி தங்களுக்கு கிடைத்துள்ள இந்த அரிய வாய்ப்பான பிறரன்பு பணியை அன்போடும், பரிவோடும், தியாக சிந்தனையோடும் செய்ய வேண்டிய அருளைத்தருமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 21.04.2018 கான்டர்பரி தூய ஆன்சல்ம் திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இன்று திருஅவையானது தூய ஆன்செல்ம் திருவிழாவைக் கொண்டாடிக்கொண்டிருக்கிறது. இந்தப் புனிதர் தனது 27வது வயதில் துறவியாகி பின்பு அந்த மடத்தின் உபதலைவராகவும் பின் அதிபராகவும் 33ஆண்டுகள் பணிசெய்தார். மடத்தின் பணியின் காரணமாக இவர்

பலமுறை இங்கிலாந்து போக வேண்டியிருந்தது. எனவே, அங்கு இவரை அநேகர் அறிந்திருந்தனர். கான்ட்ரபரி பேராயர் இறந்ததும் இவர் கான்ட்ரபரி பேராயராக நியமிக்கப்பட்டார். 1093 முதல் 1109 வரை பேராயராகப் பணிபுரிந்தார். புனிதரின் காலத்தில் இங்கிலாந்தை ஆண்டுவந்த மன்னன் திருச்சபைக்குப் பெருத்த அநீதி இழைத்ததால், ஆயர் அந்த மன்னன் எதிர்த்தார். இங்கிலாந்து நாட்டின் மன்னனை திருச்சபையை விட்டு நீக்க முடிவு செய்த திருத்தந்தையை இவர் தமது மன்றாட்டுகளால் தடுத்தார்.

"கிறிஸ்துநாதர் தம் இரத்தத்தைச் சிந்தி திருச்சபைக்குச் சுதந்திரம் பெற்றுக்கொடுத்தார். அந்த சுதந்திரத்தை அவர் மிகமிக நேசிக்கிறார்" என்று இவர் அடிக்கடி சொல்லுவார். கடின உழைப்பின் மத்தியிலும் கடவுளின் பிரசன்னம் நம் மத்தியில் இருக்கிறது என்று வலியுறுத்தி வந்தார். தூய தாமஸ் அக்குவினாசிடம் தத்துவயியலும், இறையியலும் பயின்று அதன்பின்பு திருத்தந்தை 11ம் கிளமெண்ட் இந்த புனிதரை திருஅவையின் கோட்பாட்டின் தந்தை என்று அழைக்கலானார். திருச்சபையின் உரிமைகளை மன்னர்கள் பரிக்கமுயன்றால் இவர் தம்முடைய சுகவசதிகளைத் தூக்கியெறிந்துவிட்டு போராடுவார். இந்தப் புனிதரைப் பின்பற்றும் நாம் நமது திருஅவைக்கு எதிராக நம்மை திருஅவையிலிருந்து பிரிக்க நினைக்கும் சக்திகளிடமிருந்து இறையேசு, உயிர்த்த ஆண்டவர் நம்மை காப்பாற்ற மன்றாடி இத்திருப்பலியில் இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. திருஅவையைத் தலைமையேற்று நடத்திவரும் உயிர்த்த ஆண்டவரே, தூய ஆன்செல்ம், மன்னரிடமிருந்து திருஅவையைக் காப்பாற்றப் போராடியது போல திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், அருட்சகோதரிகள், அருட்பணியாளர்கள், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் திருஅவையை எல்லா தீயசக்திகளிடமிருந்தும் பாதுகாக்க எடுக்கும் முயற்சிகளை நீர் ஆசீர்வதிக்க வேண்டுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. அனைத்து நலன்களுக்கும் ஊற்றான இறைவா, எம் நாட்டு தலைவர்களும்,பணியாளர்களும்,தங்களுக்குஏற்படும்சோதனைகளை வென்று எமக்கு தங்கள் பணிகளாலும், பண்புகளாலும் சேவைகள் ஆற்றவும், அதன் வழியாக உமது இறையாட்சியின் கருவிகளாகத் திகழவும் முன்வர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. வழிகாட்டும் தந்தையே இறைவா, ஒவ்வொரு குழந்தையும் ஆன்மீகம், நன்னெறி, கலையுணர்வு, உடல் ஆரோக்கியம், அறிவுத்திறன், ஆளுமைத்திறன் ஆகியவற்றால்வளர்ந்துபகிர்வு,பிறரன்புபோன்றஉமது மதிப்பீடுகளைக் கற்றுக்கொண்டு நாளைய நல்ல தலைவர்களாக, புனித வாழ்வில் பயணிக்க அருள்தர வேண்டுமாறு உம்மை மன்றாடுகிறோம்.





## 22.04.2018 பாஸ்கா காலம் 4ஆம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

I. தி.ப. 4: 8-12 II. 1யோவா. 3: 1-2 யோவா. 10: 11-18

இறையேசுவில் அன்புள்ள இறைமக்களே, இன்று நம் திருவையானது பாஸ்கா கால 4ஆம் ஞாயிரை சிறப்பிக்கின்றது. இன்றைய முதல் வாசகத்தில் தூய பேதுரு கூறுகிறார். "நாங்கள் புரிந்த நற்செயலுக்காக விசாரணைக்கு உள்ளாகியுள்ளோம்". ஆம், இன்றும் நாம் பலர் இதைக் கூறக் கேட்டுள்ளோம். நம் அனுபவங்கள் வழியாகவும் நமக்கு பாடம் கிடைத்திருக்கும். நான் நல்லதுதான் செய்தேன். இப்படி ஆகிவிட்டதே என புலம்பும் மனிதரையும் கண்டிப்போம். இறை இயேசுவுக்கும் இதே நிலைதான். எந்த ஒரு தவறும் செய்யாமல் தவறு செய்பவரை கண்டித்து, பல நல்லவற்றை செய்து, அதுவும் மக்கள் எதிரிலேயே சாட்சியோடு புரிந்தார். எப்படி கடவுளின் மக்களாக வாழ வேண்டும் என பல உவமைகள் வழியாகவும் அறிவுரை கூறினார்.

ஆனால் தான் வசதியாக, ஆடம்பரமாக வாழ பிறரை அடிமைப்படுத்தி பணத்தை கொள்ளையடித்து வாழ்ந்தவர்கள் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. தங்கள் சுயநலத்தால் அவரை இகழ்ந்து பாடுகளுக்கு உள்ளாக்கி கொன்றனர். ஆனால் அவர்களின் எண்ணங்களை எல்லாம் முறியடித்து, சாவுக்கு சாவி மணியத்து, வெற்றிகரமாக உயிர்த்தார். அதற்கு காரணம், அவர் தான் கடவுளின் மகனாக இருப்பதை அறிந்திருந்தார். முழுமையாக இறைத்திட்டத்தை நிறைவேற்ற உழைத்தார். நான் மட்டும் இறைமகன் அல்ல, அனைத்து மக்களும் முழுமனித விடுதலை பெற வேண்டும் என தன் இன்னுயிரைத் தந்து இதுதான் கடவுளின் மக்களாகும் வழி என கற்றுத் தருகிறார்.

நான் இறைவனை மட்டும் அறிந்திருக்கவில்லை, என் மக்களையும் அறிந்துள்ளேன். அவர்களும் என்னை அறிந்துள்ளனர் என்கிறார். இவ்வாறாக இறைவனின் திட்டத்தை நிறைவேற்றிய இறையேசுபோல நாமும் வாழ வேண்டாமா? கடவுளின் மக்கள் என அழைக்க தகுதி பெற வேண்டாமா? தூய பேதுரு போல் நற்செயல்கள் புரிந்து, தண்டனைக்குட்பட்டாலும் துணிந்து, தொடர்ந்து இறைத்திட்டத்தை நிறைவேற்ற எல்லா பலமும், ஆற்றலும், சக்தியும் இறைவன் நமக்கு வழங்க வேண்டுமென்று இத்திருப்பலியில் இணைந்து செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. மூலைக்கல்லே இறைவா, எங்கள் தாய் திருஅவையின் பணியாளராகிய எங்கள் திருத்தந்தை, கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவியர்கள் அனைவரும் உண்மை,

நேர்மையின் ஆயுதமான புனிதத்தை அணிந்து நல்ல ஆயனாக பயணித்து மக்களையும் பயணிக்க வைத்து திருஅவைக்கு மேலும் வலுசேர்க்க வேண்டிய அனைத்து வரங்களையும் கொடுத்து வழிநடத்த உம்மை மன்றாடுகிறோம்.

2. உம்மால் அன்றி வேறு யாராலும் மீட்பில்லை என்ற இறைவா,உலகத் தலைவர்கள், எங்கள் இந்திய நாட்டு தலைவர்கள் தமிழகத் தலைவர்கள் அனைவரும் மக்களின் குறைகளைக் கேட்டு நல்வழியில் அனைவரையும் வழிநடத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டு வாழ மனமாற்றம் அடைய அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. நல்ல ஆலோசகரே இறைவா, தேர்வு எழுதும் அனைத்து மாணவ மாணவிகளும் தங்கள் ஞாபக சக்தியை வளர்த்து படித்ததை நினைவில் கொண்டு தேர்வெழுதி வெற்றிபெற அருள்புரிய வேண்டுமென்று உமது துணையை நாடி மன்றாடுகிறோம்.
4. நல்ல ஆயனே இறைவா, பிரமாண்டங்களை காட்டி ஏமாற்றும் இவ்வுலகின் போலித் தன்மையை உணர்ந்து இலவசங்களைத் தவிர்த்து, உண்மையான வழி நீரே என்பதனை நாங்கள் ஏற்று நல்வழியில் பயணித்து உமது அளவில்லா அன்பினை அனுபவிக்க எங்களுக்கு நிரந்தர அருளாசீரை வழங்க உம்மை மன்றாடுகிறோம்.

## 23.04.2018 தூய ஜார்ஜ் மறைசாட்சி திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

நமது தாயாம் திருச்சபை தூய ஜார்ஜ் விழாவைச் சிறப்பிக்கின்றது. லிபியா என்றழைக்கப்படும் வெள்ளைக்குதிரைமீது உள்ள கொடிய டிராகனைக் கொல்வதுபோல் பாரம்பரியக் கதை ஒன்றுள்ளது. துருக்கி நாட்டில் ஜெரோன்ஷியஸ், பாலிகுரோனியாவுக்கு கி.பி. (256-285க்குள்) ஜார்ஜ் மகனாகப் பிறந்தார். தந்தை, கப்பதோக்கியாவிலுள்ள உரோமைப் பேரரசில் இராணுவ அதிகாரியாகப் பணியாற்றி வந்தார். இவர்கள் உத்தம கத்தோலிக்கக் கிறிஸ்துவர்களாக வாழ்ந்து, மகனையும், இறைப்பக்தியில் திடமான விசுவாசத்துடன் வளர்த்து வந்தனர்.

உரோமைப் பேரரசை தியோக்ளேஷியன் ஆட்சிபுரிந்த காலத்தில், ஜார்ஜ் போர் வீரனாகப் பணி புரிந்தார். ரோமானியர் வணங்கிய நிக்கோமேதியர் பொய்க் கடவுளுக்கு மெய்க்காப்பாளானாகப் பணிபுரிய இவரை ஏவினர். ஜார்ஜ் ஒரு கத்தோலிக்கர் என்பதால் பொய்க் கடவுளை வணங்க மறுத்தார். இதையறிந்த அரசன், ஜார்ஜிடம் இயேசுவை மறுதலித்து பொய்க்கடவுளை வணங்கும்படி கட்டளைப்பிறப்பித்தான். ஜார்ஜ் மறுத்தார். மூன்றுமுறை கயிற்றால் கட்டி இழுத்துச்சென்று சித்தரவதைச் செய்தான். இயேசுவே என் கடவுள் என உறுதியுடன் ஜார்ஜ் கூற, வெறிபிடித்த கோபத்துடன் ஜார்ஜ் தலையை வெட்டும்படி அரசன் ஆணையிட்டான்.





அதன்படி கி.பி. 303, ஏப்ரல் 23ல் தலைவெட்டப்பட்டு இயேசுவுக்கு இரத்த சாட்சியாகப் புனிதமடைந்தார்.

கி.பி. 1327ம் ஆண்டு எட்வர்டு அரசனால், இங்கிலாந்தின் பாதுகாவலராக அறிவிக்கப்படுகிறார். மற்றும் போர்த்துக்கல், வெனிஸ், பெய்ரூட், மால்டா, எத்தியோப்பியா, ஜார்ஜியா, பாலஸ்தீன், லித்தோனியா ஆகிய நாடுகளுக்குப் பாதுகாவலராகவும் அறிவிக்கப்பட்டு, வணக்கத்துக்குரியவராக, மக்கள் மனத்தில் வாழ்ந்து வருகிறார். இந்தியாவில் கேரளாவில் உள்ள எடப்பள்ளியில் "தூய ஜார்ஜ் திருத்தலம்" மிகவும் பிரபலமானது. தூய ஜார்ஜ் போல் சலனமில்லா விசுவாசிகளாக வாழ்வோம் என உறுதியெடுத்துப் பக்தியுடன் திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. நன்மையின் ஊற்றாகிய இறைவா, திருச்சபையின் தலைவரான திருத்தந்தை,ஆயர்கள்,குருக்கள்,கன்னியர்கள்,துறவறத்தார்,வேதியர் இவர்களின் படிப்பினைகளை ஏற்று உத்தம கத்தோலிக்கர்களாக வாழும் முயற்சிகளில் முழுமையாக ஈடுபட்டு. எங்களுடைய வாழ்வில் மாற்றத்தைக் கண்டிட அருள்புரியும்படி உம்மை மன்றாடுகிறோம்.
2. வாழ்வும் வழியுமான இயேசுவே, எங்கள் வாழ்க்கையில் பணம், பதவி, அதிகாரம் இவற்றைக் கொண்டு சாத்தான் சோதிக்க வரும்போது, அச்சோதனையில் வீழ்ந்துவிடாமல் புனித ஜார்ஜின் உறுதியான விசுவாசத்தை மனதில் பதித்து, கிறிஸ்துவுக்குச் சாட்சியாக வாழும் வரத்தை வழங்க வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்
3. கருணையின் தெய்வமே இறைவா, இன்று பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டு, வருந்திடும் மக்களை நலமாக்கிடவும் புனித ஜார்ஜ் கொடிய டிராகனை வென்று மக்களைக்காப்பாற்றியதுபோல,நோயினைத் தடுப்பதற்கான காரணங்களை அறிந்து அரசும், மக்களும், கவனமுடன் பின்பற்றவும் அருள்புரியும்படி ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

## 25.04.2018 தூய மாற்கு நற்செய்தியாளர் விழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவில் பிரியமான இறைமக்களே, இன்று நாம் நற்செய்தியாளர் தூய மாற்குவின் நினைவு நாளைச் சிறப்பிக்கின்றோம். முதல் நூற்றாண்டில் ஜெருசலேமைச் சேர்ந்த மரியா என்பவருக்குப் பிறந்தவர். தூய பவுலுடன் இருந்த "பர்னபா"வின் ஒன்றுவிட்ட சகோதரர் அவர்களோடு "சைப்ரெஸ்சில" சிறிது காலம் ஒன்றாக வாழ்ந்தவர். இப்புனிதருக்கு "ஜான் மாற்கு" என்ற பெயரும் உண்டு. புதிய ஏற்பாட்டின் பகுப்புகளை ஆதி கிறிஸ்தவர்களுக்குப் புரியவைத்தவர். "அலெக்சாந்திரியாவின் முதல் ஆயராக பணியை ஆரம்பித்தவர். தூய பேதுருவின் நெருங்கிய நண்பராக இருந்து இயேசு கிறிஸ்துவின் போதனைகளுக்கு மொழி பெயர்ப்பாளராக விளங்கியவர். இயேசு கிறிஸ்துவின் உண்மையான உன்னதமான

வார்த்தைகளைப் புனித இராயப்பரின் போதனைகளால் ஆணித்தரமாக பிரகடணப்படுத்தியதால் இவர் "வழக்கறிஞர்களின் பாதுகாவலர்" என்றும், வெனிஸ் நகர மாலுமிகளுக்கு கடலின் சீற்றம் காரணமாக ஆயர் உருவில் தோன்றி காப்பாற்றியதால் "வெனிஸ் நகரத்தின் பாதுகாவலர்" என்றும் போற்றப்படுகிறார்.

நற்செய்தியாளர் புனித மாற்குவின் சின்னம் "நான்கு சிறகுகளை உடைய சிங்கம்" புனித திருமுழுக்கு யோவானின் நற்செய்தியின் வாயிலாகவும் (மாற்கு 1:3) இறைவாக்கினர் எசாயாவின் திருக்காட்சிகளின் வாயிலாகவும் இது நம்பப்படுகிறது. கிறிஸ்துவத்தைத் தழுவிய புறஇனத்தாருக்கு இவர் கிரேக்க மொழியில் நற்செய்தி எழுதினார். யூதர்களின் சடங்குகளையும் வழக்கங்களையும் தன் நற்செய்தியில் குறிப்பிட்டுள்ளார். இயேசு கிறிஸ்து படைப்பின் கர்த்தா என்று அடையாளம் காட்ட இவர் நற்செய்தி எழுதினார். இயேசு கிறிஸ்துவின்மீதுள்ள நம்பிக்கையின் காரணமாக தெருவீதிகளில் இழுத்தடிக்கப்பட்டு மரணத்திற்குள்ளானார். இவர் இறந்த கி.பி. 68ம் ஆண்டு ஏப்ரல் 23ம் நாளை இவரது நினைவு நாளாக திருஅவை சிறப்பிக்கின்றது.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. நம்பிக்கையின் ஊற்றே இறைவா, உம் வழிவரும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியினர், பொதுநிலையினர் அனைவரும் உலகியல் மாற்றங்களால் கவரப்படாமல் இயேசு கிறிஸ்துவின்மீது உண்மையான நம்பிக்கை வைத்து எதற்கும் அஞ்சாமல் புனித மாற்கு போல் உறுதியோடு போராட வரம் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நற்செய்தியின் நாயகனே இறைவா, இயேசு கிறிஸ்துவின் போதனைகளை சீடர்கள், வாயிலாகவும், இறைவாக்கினர்கள் வாயிலாகவும், நற்செய்தியாளர்கள் வாயிலாகவும் கற்று உணர்ந்து அவர் தந்த விண்ணகத்தின் திறவு கோலான வேதநூலை உணர்ந்து நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை இன்னும் பல பிறஇனத்து மக்களும் பெறவேண்டுமென உம்மை மன்றாடுகிறோம்.

3. வார்த்தையின் நாயகனே இறைவா, எம் குடும்பங்களில் வளரும் இளந்தளிர்கள் தீமைகளின் கரம் தீண்டி பட்டுப்போகாமல், திரு நூலினை நாள்தோறும் கற்று அதன்படி வாழ்நாளை அமைத்துக்கொள்ள ஆர்வத்தோடு கூடிய மனப்பக்குவத்தை அருள நற்செய்தி வார்த்தைகளில் எம் குடும்பம் மிளிர உம்மை மன்றாடுகிறோம்.

4. தூய மாற்குவின் விருதுவாக்கான "ஒருவன் முதல்வனாக இருக்க விரும்பினால் அவன் அனைவரிலும் கடைசியாக இருக்கட்டும், அனைவருக்கும் பணியாளன் ஆகட்டும்" என்ற வரிகளை பின்பற்றி தாழ்ச்சியுடன் வாழும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.





**28.04.2018 தூய லூயிஸ் தே மோன் ஃபோர்ட் விழா திருப்பலி**

**முன்னுரை**

திரு. ஜான் அலெக்ஸ்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று நாம் தூய லூயி தே மான்ஃபோர்ட் அவர்களின் திருவிழாவை நினைவு கூறும் இந்நேரத்தில், திருத்தந்தை 2ம் ஜான்பால் அவர்களால் இப்புனிதர் மரியன்னைப் பக்திக்குக் காரணமானவர் என்று புகழாரம் சூட்டப்பட்டவர். 1673ல் மான்ஃபோர்ட் என்ற இடத்தில் பிறந்து, 19வயதில் இறையியல் படிக்கச் சென்றவர். தன்னிடம் இருந்த பணத்தை வழியோரம் இருந்த ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்தார். ஆடைகளையும் அவ்வாறே செய்தார். காலப்போக்கில் 27வயதில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டவர், மருத்துவமனையில் இருப்பவர்களுக்குச் சேவையாற்றுவதை வாழ்வாக்கிக் கொண்டவர். கிராமங்கள், நகரங்கள் என 17 ஆண்டுகள் ஆண்டவரின் வாழ்வுதரும் மீட்புச்செய்தியைப் போதித்தார். இவரின் புத்தகங்கள்: 1. உண்மை பக்தி, 2. செபமாலையின் இரகசியம் ஆகியவை இன்றும் புகழ்வாய்ந்தவை. அனைத்தையும் இறைத்திட்டமென ஏற்றுப் பிறருக்காகவே மிக எளிமையான வாழ்க்கை வாழ்ந்து, ஏழை மக்கள் வாழ்வு பெறவும், நோயுற்றோர் சுகம் பெறவும் பணியாற்றினார். 1716, ஏப்ரல் 20ல் விண்ணுலகம் அடைந்த இவர் 1947ல் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். தான் பிறந்த பிறப்பின் பொருளை அறிந்து கொள்ளும் எல்லோருமே பிறருக்காகத் தங்களையே கையளிப்பவர்கள், இறைவனின் கையாக இருப்பார்கள் என்பதற்கு இவரே சான்று என்பதை மனதில்கொண்டு வாழ தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தூய்மையின் திருஉருவாம் இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகளுக்காக மன்றாடுகிறோம். உள்ளமும் செயலும் நன்மையைக் கனியாக ஈந்தால்தான் முழுமையாக மனிதம் மலரும் என்பதை அவர்களின் வாழ்வின்மூலம் நாங்கள் அறிந்து, மனிதம் மலரும் இடத்தில் புனிதம் மணம்வீசும் என்பதற்கினங்க எங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ள வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நீங்கள் என் பெயரால் கேட்பதையெல்லாம் நான் தருவேன் என்றுரைத்த இறைவா, உம்மிடம் நம்பிக்கையோடு கேட்ட அனைவரும் அதைப் பெற்றுள்ளார்கள் என்பதை நாங்களும் உணர உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்று ஐந்து அப்பங்களைக் கொண்டு ஐயாயிரம் பேருக்கு உணவளித்தீரே, இன்றும் எண்ணிலடங்கா மக்களுக்கு உம்மையே உணவாகத் தரும் உம்மை இறைவனாக, ஆண்டவராக ஏற்று ஆராதிக்க வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

4. அனைத்தையும் இறைத்திட்டமென ஏற்று பிறருக்காகவே வாழ்ந்து நற்செய்தி போதித்த புனித லூயிஸ் தே மான்ஃபோர்ட், ஏழை மக்கள் வாழ்வு பெறவும், நோயாளிகள் நலம் பெறவும் தொடர்ந்து பணியாற்றியதைப் போல எமது வாழ்விலும் நாங்கள் சந்திக்கும் எளிய மக்களுக்கு இயன்ற உதவிகளை நிறைவாய்ச் செய்யும் மனத்தைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

## 29.04.2018 பாஸ்கா காலம் 5ஆம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. D.V.R. ராஜா

I. தி.ப. 9: 26-31 II. 1யோவா. 3:18-24 யோவா. 15: 1-8

இறையேசுவில் பிரியமானவர்களே, இன்று உயிர்ப்புக் காலம் 5ம் ஞாயிறைச் சிறப்பிக்க நாம் கூடியுள்ளோம். தவக்காலத்தில் பண்பட்டுள்ள நாம் தொடர்ந்து ஆண்டவரோடு இணைந்து செயல்பட்டு கனிதர வேண்டும். தொடக்கத்தில் தூய பவுல் கிறிஸ்துவுக்கு எதிராகச் செயல் பட்டாலும், கிறிஸ்துவை அறிந்தபின் பன்மடங்கு கிறிஸ்துவுக்காக பாடுகளும், துன்பங்களும், தண்டனைகளும் ஏற்று இறைப்பணி செய்தார். தான் தேர்ந்துகொண்ட நிலையில் உறுதியாய் இருந்தார்.

நாம் ஒருவரோடு ஒருவர் அன்பு கொண்டு, கிறிஸ்துவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நம் மனச்சான்றின்படி வாழும்போது, என் பெயரால் எதைக் கேட்டாலும் பெறுவீர்கள் என்ற வார்த்தைக்கு நம்மைத் தகுதிப்படுத்திக் கொள்வதோடு அவரிடம் நாம் எதையும் பெற்றுக்கொள்ள இயலும். இவற்றைக் கைக் கொள்ளாமல் நமது விருப்பப்படி வாழும்போதும், ஆண்டவரின் கட்டளைகளுக்கு முரணாகச் செயல்படும்போதும் அவரை விட்டு விலகிச் செல்கிறோம். அவரை விட்டு விலகிச் சென்றால் கனி கொடாத செடியோடு இணைந்திராதக் கிளைகளைக் களைந்து, வெட்டி தீயிடுவது போன்ற நிலைக்கு ஆளாவோம். இதையே இன்றைய வாசகங்கள் விளக்குகின்றன. எனவே ஒருவர் மற்றவரோடு அன்பு கொண்டு இறைக்கட்டளைகளைக் கடைப்பிடித்து ஆண்டவரோடு ஒன்றி வாழும்போது என் பெயரால் எதைக் கேட்டாலும் பெறுவீர்கள் என்ற நம்பிக்கையில் இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பு தந்தையே இறைவா, எமது திருச்சபையின் தலைவரை உமது அன்பிலும் வல்லமையிலும் இயக்கிடவும், உலக நாடுகளுக்கிடையேயும், உள்நாட்டிலும் ஏற்படும் பதற்றங்கள் போராக உருவெடுக்காமல் இருக்க திருத்தந்தை அமைதி ஏற்படுத்தவும் அவரின் உடல் நலனைப் பாதுகாத்து தொடர்ந்து வழிநடத்தவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு தந்தையே இறைவா, உலக நாட்டுத் தலைவர்கள் அமைதியை ஏற்படுத்தும் கருவிகளாகவும் மக்கள் முன்னேற்றத்தில் அக்கறை





உள்ளவர்களாக விளங்க நாட்டு நலனிலும் மக்கள் உயர்விலும் அக்கறை உள்ள சீரிய நிர்வாகமும் திறமையும் கொண்ட ஆட்சியாளரை நல்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பு இறைவா, எம் பங்கு மக்கள் தொடர்ந்து உம் அன்பில் நிலைத்திருந்து கட்டளைகளின்படி ஒழுகவும் கிறிஸ்துவர்களுக்கு எதிராக நடக்கும் சதித் திட்டங்களும் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கத் துணிவும் அளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. அன்பின் அருவியே இறைவா, இளையோர் தங்கள் எதிர்காலத்தைக் குறித்து பயம் கொள்ளாமல் திராட்சைக் கொடியோடு இணைந்தக் கிளைகளாக விளங்கி பிறர்க்குக் கனிதரவும், நல்ல வேலை, வருவாய் நல்கிடவும் வாழ்க்கைத் துணைக்காக எதிர்ப்பார்த்திருப்போருக்கு ஏற்ற நல்ல துணையைத் தரவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# பகுதி - 2 விசுவாசத்தில் வளர...

## உயிர்ப்பும் நம் வாழ்வும்

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

வெற்றியின் வேந்தன், கலிலேயாவின் நாயகன் வெற்றிக்கொடி ஏந்தி மானிட மக்களுக்காக, இறப்பைக் கருவியாக ஏற்று, உயிர்ப்பு என்னும் இலக்கை நிலைநாட்டுகிறார். இறைமகன் இயேசு மக்களுக்காய் கழுமரம் ஏந்தி கல்வாரி சென்றார். இவ்வாறு வரலாற்றில் இடம்பெற்ற இறைமகனின் பாடுகளும், இறப்பும் உயிர்ப்பும் அழியா சின்னமாக விளங்குகின்றன. காவலர்களாலும், கல்லறையாலும் தன்னை ஒருபோதும் கட்டிவைக்க முடியாது என்று இறைவன் தன் உயிர்ப்பின் மூலம் தெளிவாகக் காட்டுகிறார்.

பாஸ்கா என்றால் கடந்து செல்லுதல் என்று பொருள். இஸ்ரயேலரை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு. வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு அழைத்துச் சென்றார் மோயீசன். இதைத்தான் பாஸ்கா என்று கூறுகிறோம். இந்த பாஸ்காவை நினைவுகூறும் வகையில், சந்தேகத்திலிருந்து நம்பிக்கைக்கும், பகைமையிலிருந்து பாசத்திற்கும், வெறுப்பிலிருந்து விருப்பத்திற்கும், பொய்மையிலிருந்து மெய்மைக்கும், சாவிலிருந்து வாழ்விற்கும், இருளிலிருந்து ஒளிக்கும் அழைத்துச் செல்கிறது இயேசுவின் வல்லமை உள்ள பாஸ்கா. இவ்வாறு பழைய ஏற்பாட்டிற்கும், புதிய ஏற்பாட்டிற்கும் தொடர்ச்சியைக் கொடுத்து, இறைவனின் வார்த்தையும் இறைவாக்கினர்களின் கூற்றும் உண்மை எனத் தெளிவாகக் காட்டுகிறார்.

திருச்சபையின் சரித்திரத்தில் அந்த இரண்டு இரவும் நமக்கு அமைதி, நீதி, உண்மை, சகோதரத்துவம் போன்ற செய்திகளைத் தருகின்றன. கலிலேயாவின் நாயகன் வெற்றிக்கொடி ஏந்தி, மரணத்தை

வென்று மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கின்றார். இழிவாக எண்ணக்கூடிய சிலுவை மரம் இன்று வெற்றிக்கு அடிப்படையாக, மறுவாழ்வுக்கு மூலக் கல்லாக அமைகின்றது. "சாவே உன் கொடுக்கு எங்கே? சாவே உன் வெற்றி எங்கே" (1கொரி.15:55) என வீர முழக்கமிட இறைவன் நம்மை அழைக்கின்றார். இனி மரணம் என்னை ஆட்கொள்ளாது, "புயலுக்குப்பின் அமைதி, துன்பத்திற்குப்பின் இன்பம், பகைமைக்குப்பின் நட்பு இவையெல்லாம் உலகம் கூறும் வாக்குகள். ஆனால் சாவுக்குப்பின் உயிர்ப்பு என்று இறைவன் இயேசு மட்டுமே கூறுகின்றார்."

இன்று உலகில் பல சாதனைகள் நிகழ்த்தப்படுகின்றன. சிறந்த சாதனைகள் முந்தைய சாதனைகளை முறியடித்து புதிய பட்டியலில் இடம் பெறுகின்றன. ஆனால் இதுவரை முறியடிக்கப்படாத சாதனை இவ்வுலக வரலாற்றில் நடந்தது என்றால் அது "இயேசுவின் உயிர்ப்பு மட்டுமே" மூடப்பட்ட கல்லறையைச் சட்டப்படியான விசாரணைக்காகத்தான் திறப்பர் என்பதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோமே தவிர, தான் புதைக்கப்பட்ட கல்லறையை தாமே வெறுமையாக்கி, தாமே உயிருடன் எழுந்த பெருமை இயேசுவைத் தவிர இதுவரை எவராலும் நடத்தப்படாத சாதனை அல்லவா? அவரைப் புதைத்துவிட்டதாக மனப்பால் குடித்தவர்கள், அவரை யாரும் புதைத்துவிட முடியாது என்பதை அறியாத அறிவிலிகள். அவர் விதைக்கப்பட்ட கோதுமை மணி. அது பூமியைக் கிழித்து வெளிவந்தபோது அதிர்ந்து வெட்கப்பட்டனர்.

வெறும் 12 பேருடன் துவங்கிய கிறிஸ்தவம் இன்று உலகில் கால்பதிக்காத இடம் என எதையும் விட்டுவைக்கவில்லை. இயேசுவின் உயிர்ப்பே நமது உயிர்ப்புக்கும் நம்பிக்கை. திருத்தூதர் பவுல் கூறுவதுபோல "கிறிஸ்து உயிர்க்கவில்லை என்றால், நற்செய்தி பொருளற்றது, நமது நம்பிக்கையும் பொருளற்றது (1கொரி. 15:14). கிறிஸ்துவின் உயிர்ப்பு நமது உயிர்ப்பின் அச்சாரம். நாம் உயிர்க்கவில்லை என்றால், கிறிஸ்துவும் உயிர்க்கவில்லை என்கிறார் பவுல் (1கொரி 15:16). எனவே நமது உயிர்ப்பும் கிறிஸ்துவின் உயிர்ப்பும் பிரிக்கமுடியாத அளவுக்கு பின்னிப்பிணைக்கப்பட்டுள்ளன. ஆம், மனித வாழ்வின் ஒரு மாற்றமே இறப்பு. இந்த இறப்புக்குப் புதிய பொருள் தருவதும், புதிய அர்த்தம் படைப்பதும் உயிர்ப்பு.

ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு நம் அனைவருக்கும் ஓர் சிறந்த நம்பிக்கை. கிறிஸ்தவம் வாழ்வதற்கான உண்மையின் சாட்சி. உயிர்த்த இயேசு கூறுகிறார்: "கலங்காதீர்கள், உங்களுக்காக நான் கடுமையாக நொறுக்கப்பட்டேன், ஈட்டியால் குத்தித் திறக்கப்பட்டேன், மகனே, மகளே அனைத்தும் மனுமக்களாகிய உங்களுக்காகத்தான். நம்பிக்கையோடு சந்தியுங்கள். நற்கருணைப் பேழையில் காத்திருக்கிறேன். உங்கள் வீட்டுக்கதவைத் தட்டுகிறேன் நீங்கள் உள்ளே அழைத்தீர்கள் என்றால் உங்களோடு தங்குவேன். என் உயிர்ப்பின் மகிமை உங்களுக்கு விடுதலை





அளிக்கத்தான். அடிமைச் சங்கிலிகளாம் பாவத்தை அறுத்தெறிந்துவிட்டு வாருங்கள். ஆணிகள் துளைக்கப்பட்ட கரங்கள் உங்களுக்கு ஆறுதல் அளிப்பதற்காகத்தான். என் அருளைப் பெற்றுக்கொள்ளுங்கள். என் உயிர்ப்பின் ஜீவ ஒளி உங்களுக்கு என்றும் இருளின் ஆதிக்கத்திலிருந்து விடுதலைத் தரட்டும்".

ஆம் இயேசு உயிர்த்துவிட்டார். அவரோடு நாமும் உயிர்ப்போம். அவரில் வாழ்ந்து அவர் வார்த்தைகள் நம்மில் உருகொடுக்க இயேசுவை முழுமையாக அறிவோம். இயேசுவாகவே மாற முயல்வோம். வாழ்வோம் இயேசுவில் வாழ்கின்ற நம் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் செய்தி இதுவே. புதுவாழ்வு, புது படைப்பு, புதிய மதிப்பீடுகள். இவைகளை வாழ்வாக்குவோம். இயேசுவின் உயிர்ப்பிற்குச் சான்று பகர்வோம்.

## தூய மாற்கு நற்செய்தி கற்றுத்தரும் பாடம்

திரு. P விக்டர்

நான்கு நற்செய்தி நூல்களிலும் மாற்கு நற்செய்தியே மிகச்சிறியது ஆகும். இந்நூல் கி.பி. 64-70க்கு இடையில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது விவிலியப் பேரறிஞர்களின் ஒருமித்த கருத்தாகும். இதை எழுதிய "மாற்கு" என்பவர் பர்னபாவின் உறவினர் (கொலோ 4:10). இவர் தனது பணிவாழ்வில் புனித பவுலோடு பயணம் செய்துள்ளார். பவுலின் கடைசி நாட்களில் அவருக்கு உறுதுணையாக இருந்துள்ளார் (தி.ப. 12:25) இவர் பேதுருவோடு இணைந்து பணியாற்றியுள்ளார். திருத்தொண்டர் பவுலிடமிருந்தும், பேதுருவிடமிருந்தும் கற்றுக்கொண்டதை நூலாக வடித்துள்ளார். அன்றைய உரோமை அரசால் துவக்க கால கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்ட காலத்தில், அவர்களுக்கு கிறிஸ்துவைக் குறித்து சொல்லி நம்பிக்கையூட்ட இந்நற்செய்தியை இவர் தொகுத்து எழுதியுள்ளார்.

அதனால்தான் இயேசுவின் இளமைக்கால நிகழ்வுகள் எதையும் குறிப்பிடாமல் "இயேசு இறைமகன்" என்பதை வலியுறுத்தி எழுதியுள்ளதை நாம் அறிய முடிகிறது. அக்காலத்தில் பிற இனத்தைச் சேர்ந்த பலர் கிறிஸ்தவத்தைப் பின்பற்றலாயினர். அவர்களைக் கருத்தில் கொண்டு அவர்களுக்காகவும் இந்நற்செய்தி நூலை மாற்கு எழுதியிருப்பது தெரிகிறது. இயேசுவே "மெசியா" "அவரே இறைமகன்" என்னும் உறுதியில் பிற இனத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்களும் வளர இந்நற்செய்தி பெரிதும் துணையாக இருந்துள்ளது. அன்றைக்கு மாத்திரமல்ல, இன்றைக்கும் நமக்கு இறைவனைக் குறித்த நம்பிக்கையூட்டும் சாதனமாக இந்நூல் விளங்குகிறது என்றால் அது மிகையன்று. இந்நூலின் வழியாக பல பாடங்களை மாற்கு நற்செய்தியாளர் சொல்லியிருந்தாலும், அவற்றுள் ஒரு சில பாடங்களை நாம் இங்கு பார்ப்போம்.

**முதல் பாடம்**

கிறிஸ்து கடவுளுக்கும் மனிதருக்கும் ஓய்வில்லாமல் ஊழியம் செய்த ஊழியர் என்பதே இந்நூல் நமக்குக் கற்றுத்தரும் முதல் பாடமாகும். இந்நூலில் இயேசு செய்த நற்செயல்கள் பலவும் எழுதப்பட்டுள்ளன. அவர் தனது செபநேரத்தைக் கூட தியாகம் செய்து பணிசெய்துள்ளார். ஒருமுறை இயேசு தனிமையான இடத்திற்குச் சென்று அங்கே இறைவனிடம் வேண்டிக்கொண்டு இருந்தார். சீமோனும் அவருடன் இருந்தவர்களும் அவரைத்தேடிச் சென்று, அவர் செபித்துக்கொண்டிருப்பதைக் கண்டு "எல்லோரும் உம்மைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்" என்று சொல்லி அவரை அழைத்து வந்தனர் (மாற்கு 1: 35-37).

தனது செபநேரம் தடைப்பட்டாலும் அது குறித்து கோபப்படாத இயேசு, அவர்களுடன் சென்று அவர்களின் தேவைகளை நிறைவேற்றினார். அதுபோலவே உணவருந்தக்கூட நேரமில்லாதபடி ஊழியம் செய்துள்ளார். இயேசு, தனது திருத்தூதர்களைத் தேர்ந்தெடுத்தப்பிறகு பசியுற்றதால் உணவருந்த வீட்டிற்குச் செல்கின்றார். அங்கும் மக்கள் கூட்டம் கூடியதால் உணவருந்தக்கூட அவரால் முடியவில்லை (மாற்கு 3:20). அங்கும் இயேசு மனமுவந்து அவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்து முடித்தார். இறை ஊழியம் என்று வந்துவிட்டால் எந்தத் தடையையும் பொருட்படுத்தாது மக்களுக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்பதை மாற்கு நற்செய்தியின் இப்பகுதிகள் நமக்குக் கற்றுத்தருகின்றன.

**இரண்டாவது பாடம்**

மத்தேயு நற்செய்தியில் இயேசு பற்றிய தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியது என்று சொல்லி பல நிகழ்வுகள் விவரிக்கப்பட்டுள்ளன. ஆனால் மாற்கு நற்செய்தியில் தீர்க்கதரிசனங்களுக்கு முக்கியத்துவம் தராமல் இயேசு செய்த அருள் அடையாளங்களைச் சொல்லி, இயேசு இறைவனின் மகன், வல்லமையுள்ள கடவுள் என்பதை உறுதிப்பட எடுத்துரைத்துள்ளார். இந்நற்செய்தியில் இயேசு செய்த 19 அருள்அடையாளங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் எட்டு அருள் அடையாளங்கள் இயேசு நோய்வாய்ப்பட்டவர்களைக் குணமாக்கியது குறித்து எழுதப்பட்டுள்ளன.

திருத்தூதர் பேதுருவின் மாமியார் நோய் நீங்கி குணமான நிகழ்வு (மாற்கு 1:31). யூத மக்களால் கடவுளின் சாபம் என்று சொல்லப்பட்ட தொழுநோயாளியைக் குணமாக்கியது (மாற்கு 1: 41). எழுந்து நடக்க முடியாத முடக்குவாதக்காரனைக் குணமாக்கியது (மாற்கு 2:3-12). இப்படி இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். அடுத்ததாக ஐந்து அரும் அடையாளங்கள் இயற்கையை வெற்றிகொண்ட இயேசுவின் வல்லமையை விளக்குவதாக அமைந்துள்ளன. உதாரணமாக: ஒருமுறை இயேசுவும் அவரது சீடர்களும் படகில் செல்லும்பொழுது பெருங்காற்று எழும்பி கடலைக் கொந்தளிக்க வைத்தது. பயந்து போன சீடர்கள் இயேசுவிடம் கூற அவர்





"இறையாதே, அமைதியாயிரு" என்று சொல்ல கடல் அமைதியாயிற்று. காற்றும் ஓய்ந்தது (மாற்கு 4: 39). இன்னொருமுறை இயேசு கடல்மீது நடந்துவந்து அதிசயம் செய்தார் (மாற்கு 6: 49). ஐந்து அப்பங்களைக் கொண்டு ஐயாயிரம் பேருக்கும், ஏழு அப்பங்களைக்கொண்டு நாலாயிரம் பேருக்கும் உணவளித்து அருஞ்செயல்கள் செய்தார் (மாற்கு 6:43, 8:8).

இன்னும் நான்கு அடையாளங்கள் பிசாசுகளின்மேல் அவருக்கிருந்த அதிகாரத்தை வெளிப்படுத்துவனவாக உள்ளன. உதாரணமாக கனானியப் பெண்ணின் மகளுக்கிருந்த தீய ஆவியை இயேசு விலகிப்போகச் செய்து அற்புதம் செய்தார் (மாற்கு 7:25). அதுபோலவே தீய ஆவிபிடித்த ஒருசிறுவனை இயேசுவின் சீடர்களிடம் கொண்டுவந்தனர். அவர்களால் அத்தீய ஆவியை விரட்டமுடியவில்லை. அந்தத் தீய ஆவியை விரட்டி இயேசு அந்த சிறுவனுக்குச் சுகமளித்தார் (மாற்கு 9:26). அடுத்த இரண்டு அருள் அடையாளங்கள்: இயேசு மரணத்தின்போது அதிகாரமுள்ளவராய் இருந்தார் என்பதை விளக்குகின்றன. உதாரணமாக "யாயீர்" என்கிற தொழுகைக்கூட தலைவனின் மகளை இயேசு உயிர்ப்பித்த நிகழ்வு (மாற்கு 5: 47). மற்றொன்று மரித்த இயேசு மூன்றாம் நாள் தானே உயிர்த்து எழுந்தது (மாற்கு 16:3). இவற்றின் மூலம் நாம் ஆராதிக்கும் ஆண்டவர் இயேசு எவ்வளவு வல்லமையுள்ளவர் என்பதை அறிய முடிகிறது.

**மூன்றாவது பாடம்**

இயேசு மக்கள்மீது எவ்வளவு பரிவுகொண்டுள்ளார் என்பது மாற்கு எழுதிய நற்செய்தி நூலிலிருந்து விளங்குகிறது. அவரைப் பின்பற்றும் நாமும் மற்றவர்களிடம் பரிவுடன் நடந்துகொள்ள வேண்டும் என்னும் பாடத்தைக் கற்றுத்தருவதாய் விளங்குகிறது. ஒருமுறை திருத்தூதர்கள் தங்களுடைய பணிவாழ்வில் தாங்கள் செய்தவை, கற்பித்தவைகளையெல்லாம் இயேசுவுக்குத் தெரிவித்தார்கள். அதனால் தனிமையான இடத்திற்குச் செல்ல முற்பட்டனர். இதையறிந்த மக்கள் கூட்டமாக அவருக்கு முன்பாகவே அந்த இடத்திற்குச் சென்றனர். இயேசு அங்குச் சென்று பார்த்தபொழுது பெருங்கூட்டமான அவர்கள் ஆயனில்லா ஆடுகளைப்போல இருந்ததைக்கண்டு அவர்கள்மேல் "பரிவு" கொண்டு பலவற்றைக் கற்பித்தார். அதுமட்டுமன்று, திருத்தூதர்கள் முடியாது என்று சொன்னபொழுதும் ஐந்து அப்பங்களைக்கொண்டு ஐயாயிரம் பேருக்கு வயிறார உணவளித்து, மகிழ்ந்தார். இயேசு எளிய மக்கள்மீது பரிவு கொள்பவர் என்பதை இதனால் அறிய முடிகிறது (மாற்கு 6: 30-42).

இந்த ஒரு இடத்தில் மட்டுமன்று, இயேசுவின் ஆடையைத் தொட்டு சுகம் பெற்ற பெண்ணிடத்திலும் (மாற்கு 5: 34). தனது மகளைப்பிடித்திருந்த தீய ஆவியை விரட்டும்படி சொன்ன கனானிய பெண்ணிடத்திலும் (மாற்கு 6: 29), முடக்குவாதமுற்றவனை வீட்டின் மேற்கூரையைப் பிரித்து கட்டிலோடு உள்ளே இறக்கினவர்களிடத்திலும் (மாற்கு 2:11) இப்படி அவரை நம்பின ஒவ்வொருவரிடத்திலும் பரிவு கொண்டு அவர்களுக்கான காரியங்களை,

அவர்களின் தேவைகளை பூர்த்திசெய்தார். இயேசுவைப்பின்பற்றும் நமது கிறிஸ்துவ வாழ்வு என்பது நம்மைச் சுற்றியிருக்கும் யாவருக்கும் பரிவுடன் உதவி செய்யும் வாழ்வு என்பதை மாற்கு நற்செய்தியாளர் நமக்குக் கற்பிக்கின்றார்.

**நான்காவது பாடம்**

கொடுப்பதைக் குறித்த ஒரு பாடத்தை மாற்கு நற்செய்தியாளர் நமக்குக் கற்றுத்தருகிறார். ஒருமுறை ஆலயத்தில் காணிக்கைப்பெட்டிக்கு எதிராக இயேசு அமர்ந்துகொண்டு மக்கள் செப்புக்காசு போடுவதை உற்றுநோக்கிக் கொண்டிருந்தார். செல்வர் பலர் அதில் மிகுதியாய் போட்டனர். ஏழைக் கைம்பெண் ஒரு கொதிராந்துக்கு இணையான இரண்டு செப்புக் காசுகளைப் போட்டார் (மாற்கு 12: 41-44). மனிதனுடைய பார்வையில் இது மிகச்சிறிய தொகைதான். சாதாரணமாக இப்படிப்பட்டவர்களை யாரும் பெரிதாக மதிப்பதில்லை. அவர்களைக் கண்டுக்கொள்வதுமில்லை. ஆனால் இயேசு அந்தக் கைம்பெண்ணைப் பாராட்டுகின்றார். இருப்பதிலிருந்து கொடுப்பது பெரிதன்று. மாறாக இல்லாதிருக்கும் நிலையிலும் கடவுளுக்குக் கொடுக்க வேண்டும் என்கிற சிந்தை வந்ததே, இந்த நல்ல மனதைத்தான் இயேசு பாராட்டுகின்றார். ஏழைகளையும் மதிக்க வேண்டும் இல்லாதோருக்கு உவப்புடன் கொடுக்க வேண்டும் என்கிற பாடத்தை இப்பகுதிமூலம் நமக்குக் கற்றுத் தருகிறார்.

**ஐந்தாவது பாடம்**

"இயேசுகிறிஸ்து துன்பப்பட்டு மரித்து உயிர்த்தெழுந்து மீட்பரானார்" என்னும் தொடக்கக்காலத் திருச்சபையின் மைய போதனையை, இயேசுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளின் அடிப்படையில் மாற்கு நற்செய்தி நமக்கு விவரிக்கின்றது. அதன் இறுதி நிகழ்வாக இயேசு இவ்வுலகைவிட்டு விண்ணேற்பு அடையும் முன்பு திருத்தொண்டர்களிடம் தனது இறுதி விருப்பத்தை வெளியிடுகின்றார். "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைச்சாற்றுங்கள்" (மாற்கு 16:15) என்று சொல்லி, தன்னோடு இந்த நற்செய்தி அறிவிப்புப்பணி முழுமைப் பெறவில்லை என்பதையும், இதுதான் தொடக்கம் என்பதையும் கூறிய இயேசு, தன்னால் துவக்கப்பட்ட இப்பணி தனது திருத்தொண்டர்களாலே தொடர வேண்டுமென்று விரும்பி அவர்களிடத்தில் தனது விருப்பதை, எதிர்ப்பார்ப்பை வெளிப்படுத்துகின்றார். நம்பிக்கை கொண்டோர் மீட்பு பெறுவர் என்பதையும் அவர்களுக்கு தாம் வழங்கவிருக்கும் சிறப்பு வரங்கள் என்னவென்பதையும் அவர்களுக்கு விவரிக்கின்றார்.

"நம்பிக்கைக் கொண்டோர் பேய்களை ஓட்டுவர், கொல்லும் நஞ்சைக் குடித்தாலும் அது அவர்களுக்குத் தீங்கிழைக்காது, புதிய மொழிகளைப் பேசுபவர், பாம்புகளைத் தம் கையால் பிடிப்பர். உடல்நல மற்றோர்மீது கைகளை வைக்க அவர்கள் குணமாவர்" (மாற்கு 16:17-18) என்று கூறி திருத்தொண்டர்களை ஊக்குவிக்கின்றார். நற்செய்தி அறிவிப்புப்பணி திருத்தொண்டர்களோடு நின்றுவிடாமல் வாழையடி வாழைபோல உலகம்





இருக்கும் வரையிலும் தொடர வேண்டும் என்பது கடவுளின் விருப்பம் என்பதை இந்நிகழ்ச்சிகள் நமக்கு நினைவூட்டுகின்றன. அதுமட்டுமன்று, நற்செய்தி அறிவிப்பது நம் ஒவ்வொருவர் மேலும் சுமத்தப்பட்ட கடமையாகும் என்பதை நற்செய்தியாளர் நமக்குக் கற்றுத்தருகிறார்.

**முடிவுரை**

மாற்கு நற்செய்தியாளர் கற்றுத்தந்த ஒரு சில பாடங்களை மட்டுமே பார்த்துள்ளோம். நற்செய்தியைத் தியானத்துடன் வாசிப்போம். முழுமையாகக் கற்றுக்கொண்டு சிறப்பான விதத்தில் திருத்தொண்டுபுரிய இயேசு நம்மை அழைக்கின்றார். அழைப்பை ஏற்றுக்கொள்வோம் அவருக்காக வாழ்வோம், பரிசுத்த ஆவியாவனர் நம்மை வழிநடத்துவாராக.

## தூய லூயிஸ் தே மோன்ஃபோர்ட்

திரு. ஜான் அலெக்ஸ்

பிரான்ஸ் நாட்டில் மான்ஃபோர்ட் என்னுமிடத்தில் 1673 ஜனவரி 31ம் நாள் பிறந்தவர் லூயிஸ். குழந்தைப் பருவம் முதலே நற்கருணை ஆண்டவர் மீது அளவற்ற அன்பும் பக்தியும் கொண்டிருந்தவர். இவர் அடிக்கடி ஆலயத்திற்குச் சென்று செபிக்கும் பழக்கத்தைக் கொண்டவராகத் திகழ்ந்தார். லூயிஸ் 12ம் வயதில் ரென்னஸ் என்ற இடத்தில் உள்ள இயேசு சபைக் கல்லூரியில் படித்தார். அங்குள்ள ஆலயத்தில் இளையோர் குழு ஒன்று இருந்தது. அவர்கள் விடுமுறை நாட்களில் ஏழை எளியோர் மற்றும் குணப்படுத்த முடியாத நோயுடன் துன்புறும் மக்களைச் சந்திக்கச் செல்வார்கள். நோயுற்றோருக்கு ஆறுதல் சொல்லி அவர்களின் புண்களைச் சுத்தம் செய்து மருந்திடுவார்கள். உணவு வேளையில் நல்ல புத்தகங்களை அவர்களுக்கு வாசித்துக் காட்டுவார்கள். இவர்களுடன் தவறாமல் லூயிஸ் செல்வார்.

காலப்போக்கில் இறையியல் படிப்பிற்காக 19 வயதில் பாரிஸ் நகருக்கு நடந்தே சென்றார். அவ்வாறு செல்லும்போது தன்னிடம் இருந்த பணத்தை வழியோரம் இருக்கும் ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்தார். ஆடைகளையும் அவ்வாறே கொடுத்தார். படிப்பு முடித்த லூயிஸ் 27 வயதில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். தன் சேவையை இறைப்பணியாக மருத்துவமனையில் உள்ளவர்களுக்குச் செய்ய முடிவெடுத்தார். தம் அழைத்தலின் உண்மையான நோக்கத்தை 1705ம் ஆண்டு 32வது வயதில்தான் லூயிஸ் புரிந்து கொண்டார். அதன்படி நற்செய்தி போதிக்க தன்னையே அர்ப்பணித்து, கிராமங்கள், நகரங்கள் என 17 ஆண்டுகள் ஆண்டவரின் வாழ்வு தரும் மீட்புள்ள செய்தியைப் போதித்தார். சிறந்த பேச்சாளரான லூயிஸின் எளிய வாக்கியங்கள் மக்களைக் கவர்ந்தன. ஏழைகள் மீது அளவற்ற அன்பு மிகுந்தவராக விளங்கினார். நம்ப முடியாத அளவுக்கு எளிமையான ஒரு வாழ்வு வாழ்ந்தார். இவரின் ஏழ்மையைக் கண்டு பலர் இகழ்ந்துரைத்தாலும் இறைவனின் துணையுடன் துணிவோடு வாழ்ந்து வந்தார்.

இவரின் வாழ்க்கையில் இரண்டு முக்கியமான நிகழ்வுகள். முதலாவதாக இவர் ஒருமுறை "லா ரொச்சல்லே" என்ற இடத்தில் போர் வீரர்களுக்கு இறைச் செய்தியைப் போதித்தார். அந்த மறையுரை கேட்ட அனைத்து வீரர்களும் தங்களது குற்றங்களை நினைத்து கதறினார்கள். புனிதப் பவனியின்போது அந்த படையின் தலைவன் உட்பட அனைவரும் வெறுங்காலுடன் ஒரு கையில் சிலுவையும் மறு கையில் செபமாலையும் பிடித்து பக்தியுடன் நடந்தார்கள். இரண்டாவது நிகழ்வு, "பொன்சாத்து" என்ற இடத்தில் மக்கள் அனைவரின் ஒத்துழைப்புடன் கல்வாரி மலையின் வடிவத்தை எழுப்ப முடிவு செய்தார் லூயிஸ். 200 முதல் 400 பேர்கள் இணைந்து 15 மாதங்கள் கடினமாக முயன்று கல்வாரி மலையை எழுப்பினார்கள். வேலை முடியும் நிலையில் அதனை இடிக்க வேண்டும் என்று அரசர் ஆணையிட்டார். மக்கள் பல்வேறு வழிகளில் போராடியும் அரசரின் உத்தரவே வெற்றி பெற்றது. ஆனால் லூயிஸ் எதைப்பற்றியும் கவலையில்லாமல் "கடவுள் போற்றப்படுவாராக" என்று மக்களைப் பார்த்து பதிலுரைத்தார்.

அனைத்தையும் இறைத்திட்டமென ஏற்று பிறருக்காகவே வாழ்ந்து நற்செய்தி போதித்த லூயிஸ், ஏழை மக்கள் வாழ்வு பெறவும், நோயாளிகள் நலம் பெறவும் தொடர்ந்து பணியாற்ற விரும்பினார். தான் இறப்பதற்கு முந்திய ஆண்டில் அருட்சகோதரிகளுக்கு ஒரு சபையும், அருட்தந்தையர்களுக்கும், அருட்சகோதரர்களுக்கும் என தனித்தனியே துறவற சபைகளையும் ஏற்படுத்தினார். இறைவனின் திட்டப்படி 1716 ஏப்ரல் 28ல் மறைந்தார். ஜுலை 27, 1947ல் திருத்தந்தை 12ம் பத்திநாதர் இவரைப் புனித நிலைக்கு உயர்த்தினார். தான் பிறந்த பிறப்பின் பொருளை அறிந்து கொள்ளும் எல்லாருமே பிறருக்காகத் தங்களையே கையளிப்பார்கள், இறைவனின் கையாக இருப்பார்கள் என்னும் செய்தியை இவரது வாழ்வு நமக்கு உணர்த்துகிறது என்றால் அது மிகையாகாது. நாமும் இவரின் வழியில் நடந்து இறையருள் பெறுவோம்.

## திருச்சபைச் செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் ச.ச.

### அருட்பணியாளர் இறை இரக்கத்தின் சான்றாக விளங்க வேண்டும்

ஒப்புரவு அருளடையாளத்தை நிறைவேற்றுபவர்கள், அதைப் பெறவருகின்ற விசுவாசிகளுக்கு, இறை இரக்கத்தின் சான்றுகளாகவும், அவர்களுக்குச் செவிமடுப்பவர்களாகவும், அவர்களின் மனச்சான்று மற்றும் சுதந்திரத்தை எப்போதும் மதிப்பவர்களாகவும் இருக்குமாறு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வருங்கால அருட்பணியாளர்கள் குழு ஒன்றிடம் கூறினார்.

### திருப்பலியில் பங்குகொள்ள பணம் கட்டத் தேவையில்லை

திருப்பலி குறித்து புதன் மறைக்கல்வியுரைகளில் விளக்கி





வருகின்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இப்புதனன்று, நற்கருணை மன்றாட்டுப் பற்றி விளக்கினார். திருப்பலியில் பங்குகொள்ள பணம் கட்டத் தேவையில்லை என்றும், கிறிஸ்துவின் மீட்பு இலவசமானது என்றும் இந்த உரையில் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

### மத்தியக் கிழக்கு மோதல்களால் குழந்தை உயிரிழப்புகள் அதிகரிப்பு

மத்தியக் கிழக்கு நாடுகள் மற்றும் வட ஆப்ரிக்காவில் நடைபெறும் மோதல்களால், சனவரி மாதத்தில் மட்டும், குறைந்தது, 83 குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக யுனிசெ/ப் அமைப்பு வெளியிட்ட அறிக்கை கூறுகிறது. சிரியாவில் 59 குழந்தைகள், ஏமனில் 16, லிபியாவில் 6, ஈராக் மற்றும் பாலஸ்தீனத்தில் ஒன்று வீதம், 83குழந்தைகள் ஜனவரி மாதத்தில் மோதல்களுக்குப் பலியாகியுள்ளதாகக் கூறும் ஐ.நாவின் குழந்தைக்கான அவசரகால நிதி அமைப்பு, இது தவிர, லெபனானில் அடைக்கலம் தேடியுள்ள குழந்தைகளுள் நான்குபேர் உயிரிழந்துள்ளதையும் குறிப்பிடுகின்றது. மத்தியக் கிழக்கு நாடுகளிலும், வட ஆப்ரிக்காவிலும் பல இலட்சக்கணக்கான குழந்தைகள் தங்கள் குழந்தைப் பருவத்தை இழந்துள்ளதுடன், மாற்றுத்திறனாளிகளாக ஆக்கப்பட்டுள்ளதாகவும் செய்தி வெளியிடும் யுனிசெ/ப் அமைப்பு, பள்ளிக்குச் செல்ல முடியா நிலையிலும் விளையாடக் கூட உரிமையற்று வாழும் நிலை குழந்தைகளுக்கு தொடர்ந்து இருப்பதாகவும் தெரிவிக்கிறது.

### இந்தியா, திருஅவையின் வருங்காலத்திற்கு நம்பிக்கை

"திருஅவையின் வருங்காலத்திற்கு ஏராளமான வாக்குறுதிகளை, இந்தியத் திருஅவை வழங்குகின்றது" என்று, புதியவழி நற்செய்தி அறிவிப்பு பற்றி பெங்களூரில் நடைபெற்ற கூட்டத்தில் நற்செய்தி அறிவிப்பு பேராயத்தின் இணைச்செயலரும், பாப்பிறை மறைப்பணி கழகங்களின் தலைவருமாகிய பேராயர், Giovanni Pietro Dal Toso அவர்கள், கூறினார். பாப்பிறை மறைப்பணி கழகங்களின் ஆரம்பம், அதன் நோக்கம் மற்றும் அதன் பணிகள் பற்றி எடுத்துரைத்த Dal Toso பேராயர் அவர்கள், இந்தியத் திருஅவை ஆற்றிவரும் நற்செய்திப் பணிகளைப் பாராட்டி ஊக்குவித்தார். 2019ம் ஆண்டு அக்டோபர், சிறப்பு மறைப்பணி மாதமாகக் கடைப்பிடிக்கப்படுவது குறித்துப் பேசிய பேராயர் Dal Toso அவர்கள், இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மறைமாவட்டமும் இதற்குரிய தயாரிப்புக்களைத் தொடங்குமாறும், தலத்திருஅவைகளின் மேய்ப்புப்பணித் திட்டத்தில், நற்செய்தி அறிவிப்பு, மைய நிகழ்வாக அறிவிக்கப்படுமாறும் கேட்டுக்கொண்டார்.

### கருணைக் கொலைக்கு எதிராக இந்திய கத்தோலிக்கத் திருஅவை

தீராத நோயால் பாதிக்கப்பட்டு துன்புறும் நோயாளர்கள் கண்ணியமாக இறக்கும் வகையில் அவர்களை கருணைக்கொலை செய்வதற்கு இந்திய உச்ச நீதிமன்றம் அனுமதியளித்துள்ள நிலையில்,

எல்லா வகையான கருணைக் கொலைகளுக்கு எதிரான தன் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது, இந்திய கத்தோலிக்கத் திருஅவை. இந்திய உச்ச நீதிமன்றம், கருணைக் கொலையை அனுமதித்து, இவ்வெள்ளியன்று வெளியிட்டுள்ள தீர்ப்பையொட்டி, ஆசியச் செய்தியிடம் கருத்து தெரிவித்துள்ள, இந்திய ஆயர் பேரவையின் நீதி, அமைதி, மற்றும் வளர்ச்சிப் பணிக்குழுவின் செயலர், அருள்பணி ஸ்டீபன் பெர்னான்டோ அவர்கள், கருணைக்கொலைக்கு ஆதரவாகத் தெரிவிக்கப்படும் பரிந்துரைகளை, திருஅவை புறக்கணிக்கின்றது என்று தெரிவித்தார்.

கருவையோ, கருவில் வளரும் குழந்தையையோ, வயது வந்தவரையோ, வயதானவரையோ, தீராத நோயால் துன்புறுவோரையோ அல்லது இறந்து கொண்டிருக்கும் மனிதரையோ, யாராய் இருந்தாலும், அப்பாவி மனித உயிர்களைக் கொலை செய்வது எந்த விதத்திலும் அனுமதிக்கப்பட முடியாதது என்று கூறினார், அருட்பணி ஸ்டீபன் பெர்னான்டோ. மேலும் கருணைக்கொலையைச் சட்டமுறைப்படி அங்கீகரிப்பது, இறப்பது நல்லது என்ற சோதனைக்குட்படும் மனிதர்கள் உட்பட, நலிந்த மக்களின் வாழ்வுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது என்று இந்திய ஆயர் பேரவை எச்சரித்துள்ளது.

**சிரியாவில் அப்பாவி மக்கள் மீண்டும் படுகொலை**

சிரியாவில் நடைபெற்றுவரும் இரத்தம் சிந்தும் சண்டையில், பலியாகும் அப்பாவி மக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்ற வேளையில், இந்நிலைமை அந்நாட்டு மக்களுக்கு, குறிப்பாக சிறார்க்கு இப்பூமி நரகமாக இருக்கின்றது என்று. சிரியா திருப்பீட தூதர், கர்தினால் மாரியோ செனாரி அவர்கள் கூறினார். ஒன்றுமறியாத அப்பாவி மக்கள் கொலை செய்யப்படுவது மிகவும் கொடூரமானது என்றுரைத்துள்ள கர்தினால் செனாரி அவர்கள், குண்டு வீச்சு தாக்குதல்களால், உறுப்புகளை இழந்துள்ள மற்றும் உயிரிழந்துள்ள, சிறாரின் நிலைகளை விளக்கியுள்ளார்.

சிரியாவில் 2011ம் ஆண்டில் சண்டை தொடங்கியதிலிருந்து அறுபது இலட்சம் சிறார் உட்பட, ஒரு கோடியே 35 இலட்சத்துக்கு மேற்பட்ட சிரியா நாட்டினர், கடும் மனிதாபிமான நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் ஏறத்தாழ ஒரு கோடியே 15 இலட்சம் சிறாருக்குப் போதுமான மருத்துவ வசதிகள் கிடைக்கவில்லை என்று ஐ.நா. கணித்துள்ளதை இங்கு நினைவுறுத்துகிறோம்.





## சுடர் வாசகர் போட்டி - 45 சரியான விடைகள்

1. தூய பெலிசித்தா
2. தூய இறையோவான்
3. சிறிய செடி
4. லேவி. 23:40ல்
5. குருத்து ஞாயிறு
6. திருத்தந்தை 16ஆம் ஆசிர்வாதப்பர்
7. அமைதியில் வழிபட வேண்டும்
8. 1கொரி 1:22-25
9. தூய பெர்பெத்துவா
10. தூய பேட்ரிக்
11. தூய யோசேப்பு
12. வாளாக மாறுகிறது
13. இறைவாக்கு வழிபாடு, காலடி கழுவும் சடங்கு, நற்கருணை வழிபாடு, நற்கருணை பவனி
14. தூய யோசேப்பு
15. மும்பை பேராயர் கர்தினால் ஆசுவால்ட் கிரேசியஸ்

**குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்**

1. F.A. ஆரோக்கிய ஜேம்ஸ் பெனடிக்ட், சென்னை.
2. சகோ. மெல்கியோர், கோவை.
3. லீன் துரை, சிவகாசி.

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

தொழிலாளரான தூய சூசையப்பர்
தூய அத்தனாசியார்
தூய பிலிப்பு, யாக்கோபு திருத்தூதர்கள்
பாஸ்கா காலம் 6ஆம் ஞாயிறு / தூய தோமினிக் சாவியோ - விழா
ஆண்டவரின் விண்ணேற்றம் பெருவிழா / தூய மரிய மசரெல்லோ
தூய மத்தியாஸ், திருத்தூதர் விழா
தூய லெயனார்து முரியால்தோ
தூய ஆவி பெருவிழா
தூய மகதலா மரியா கன்னியர்
தூய பிலிப்பு நேரியார் மறைப்பணியாளர்
மூவொரு கடவுள் பெருவிழா
தூய ஜோசப் கொவால்ஸ்கி
தூய மரியன்னை எலிசபெத்தை சந்தித்தது திருவிழா

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

தூய ஆவியே துணையாளரே
மூவொரு இறைவன் - ஒரே கடவுள்
தூய மசரெல்லோ - வாழ்வு தரும் பாடம்
திருச்சபை செய்திகள்

**தீபகச் சுடர்**

அன்பு வாசகர்களே!

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:...................................
முகவரி:..................................
.........................................
.........................................
.........................................





## சுடர் வாசகர் போட்டி - 46

1. இறை இரக்கத்தின் திருவிழா எந்த நாளில் வருகிறது?
2. ”நான் ஆண்டவரின் அடிமை”திருவிவிலியத்தில் எங்குஉள்ளது?
3. தூய தனிஸ்லாஸ் பிறந்த நாள் ஆண்டு என்ன?
4. கான்டர்பரி தூய ஆன்சல்ம் அவர்களை திருச்சபையின் கோட்பாட்டின் தந்தை என்று அழைத்த திருத்தந்தை யார்?
5. ரோமானிய பொய் கடவுளுக்கு பணிபுரிய மறுத்த புனிதர் யார்?
6. தூய பர்னபாவின் ஒன்றுவிட்ட சகோதரர் என்று ஆசிரியர் யாரைக் கூறுகிறார்?
7. உண்மை, பக்தி, செபமாலையின் இரகசியம் இந்த இரண்டு நூல்களை எழுதியவர் யார்?
8. “நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்” என்று முதலில் முழுக்க மிட்டவர் யார்?
9. “உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவோம்” திருவிவிலியத்தில் எங்கு உள்ளது?
10. ஒரு மன்னனை தவறு செய்ததால் திருச்சபையிலிருந்து விலக்கிய புனிதர் யார்?
11. கான்டர்பரி தூய ஆன்சல்ம் கிறிஸ்துவின் சுதந்திரம் பற்றி அடிக்கடி கூறும் வார்த்தை என்ன?
12. இனிகோ மருத்துவனையில் இருந்தபோது அவரிடம் கொடுக்கப்பட்ட 2 நூல்கள் என்ன?
13. கி.பி. 303 ஏப்ரல் 23ல் தலைவெட்டப்பட்டு இறந்த புனிதர் யார்?
14. வெனிஸ் நகரத்தின் பாதுகாவலர் யார்?
15. இறையியல் படிக்க பாரிஸ் நகருக்கு நடந்தே சென்ற புனிதர் யார்?

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத “சுடர் வாசகர் போட்டி” பதில்களை ஏப்ரல் 20ம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## ஏப்ரல் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | ஞா | பாஸ்கா காலம் முதல் ஞாயிறு | I. தி.ப. 10: 34அ,37-43<br>II. கொலோ. 3: 1-4 | யோவா. 20: 1-9 |
| 2 | தி | | தி.ப. 2: 14, 22-33 | மத். 28: 8-15 |
| 3 | செ | | தி.ப. 2: 36-41 | யோவா. 20: 11-18 |
| 4 | பு | | தி.ப. 3: 1-10 | லூக். 24: 13-35 |
| 5 | வி | | தி.ப. 3: 11-26 | லூக். 24: 35-48 |
| 6 | வெ | | தி.ப. 4: 1-12 | யோவா. 21: 1-14 |
| 7 | ச | | தி.ப. 4:13-21 | மாற்கு 16: 9-15 |
| 8 | ஞா | பாஸ்கா காலம் 2ஆம் ஞாயிறு - இறை இரக்கத்தின் ஞாயிறு | I. தி.ப. 4: 32-35<br>II. 1யோவா. 5: 1-6 | யோவா. 20: 19-31 |
| 9 | தி | **கிறிஸ்து பிறப்பு முன்னறிவிப்புப் பெருவிழா** | I. எசா. 7: 10-14,8:10ஆ<br>II. எபி. 10:4-10 | லூக். 1: 26-38 |
| 10 | செ | | தி.ப. 4: 32-37 | யோவா. 3: 7-15 |
| 11 | பு | தூய ஸ்தனிஸ்லாஸ் ஆயர் | தி.ப. 5: 17-26 | யோவா. 3: 16-21 |
| 12 | வி | | தி.ப. 5: 27-33 | யோவா. 3: 31-36 |
| 13 | வெ | | தி.ப. 5: 34-42 | யோவா. 6: 1-15 |
| 14 | ச | | தி.ப. 6: 1-7 | யோவா. 6: 16-21 |
| 15 | ஞா | பாஸ்கா காலம் 3ஆம் ஞாயிறு | II. தி.ப. 3:13-15,17-19<br>II. 1யோவா. 2:1-5அ | லூக். 24: 35-48 |
| 16 | தி | | தி.ப. 6: 8-15 | யோவா. 6: 22-29 |
| 17 | செ | | தி.ப 7: 51-8:1அ | யோவா. 6: 30-35 |
| 18 | பு | | தி.ப. 8: 1ஆ-8 | யோவா. 6: 35-40 |
| 19 | வி | | தி.ப. 8: 26-40 | யோவா. 6: 44-51 |
| 20 | வெ | | தி.ப. 9: 1-20 | யோவா 6: 52-59 |
| 21 | ச | கான்டர்பரி தூய ஆன்சல்ம் | தி.ப. 9: 31-42 | யோவா 6: 60-69 |
| 22 | ஞா | பாஸ்கா காலம் 4ஆம் ஞாயிறு | I. தி.ப. 4: 8-12<br>II. 1யோவா. 3: 1-2 | யோவா 10: 11-18 |
| 23 | தி | தூய ஜார்ஜ் மறைசாட்சி | தி.ப. 11: 1-18 | யோவா. 10: 1-10 |
| 24 | செ | தூய சிக்மரிஞ்சன் ஃபிதெலிஸ் | தி.ப. 11: 19-26 | யோவா 10: 22-30 |
| 25 | பு | தூய மாற்கு நற்செய்தியாளர் | 1பேதுரு 5: 5ஆ-14 | மாற்கு 16: 15-20 |
| 26 | வி | | தி.ப. 13: 13-25 | யோவா.13: 16-20 |
| 27 | வெ | | தி.ப. 13: 26-33 | யோவா. 14: 1-6 |
| 28 | ச | தூய பீட்டர் சானல் | தி.ப. 13: 44-52 | யோவா. 14: 7-14 |
| 29 | ஞா | தூய லூயி தெ மரி மோன்போர்ட் | I. தி.ப. 9: 26-31<br>II. 1யோவா.3: 18-24 | யோவா. 15: 1-8 |
| 30 | தி | பாஸ்கா காலம் 5ம் ஞாயிறு | தி.ப. 14: 5-18 | யோவா.14: 21-26 |